


# தொண்டன்

ஆரம்பம்: 1969–பெப்ரவரி

செப்டம்பர் - 2007 சமய – சமூக – இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

செப்டம்பர் - 2007

மலர்-39 இதழ்-07

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

# உள்ளே



| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| தமிழ்த்தூது தனிநாயகம்... | - | 02 |
| கலாநிதி ஈழத்துப் பூராடனாரின்... | - | 05 |
| துறவற வாழ்வில் பொன்விழா... | - | 06 |
| கொலைகளை நிறுத்துங்கள்... | - | 07 |
| இலங்கையில் வெளியான ... | - | 09 |
| மாணவர் பக்கம்... | - | 11 |
| மருத்துவம்... மருத்துவம்... | - | 13 |
| இலக்கிய மஞ்சரி | - | 16 |
| அருட்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ்... | - | 17 |
| இலங்கையில் பல்கலைக்கழக... | - | 19 |
| ஞானப் புத்தகம்.... | - | 20 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 21 |
| உண்மையான நட்பு... | - | 23 |
| மனக்கோலம்... | - | 24 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |

விலை : *20/=*

ஆண்டு சந்தா *: 350/=*

(தபாற்செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

வாழ்க்கையிலே தோற்றுப்போய் விடுவோம் என்று எண்ணுபவர்களெல்லாம் புதிய முயற்சிகள் எடுப்பதில்லை.

தோல்வியைச் சந்திப்பது என்பது அவமானம் என்று கருதுபவர்களும் புதிதாக எதையும் ஆரம்பிக்க முற்படுவதில்லை.

தோல்வி என்பது மரணத்தின் விளிம்பு என்று சிந்திப்பவர்களும் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தைப் புரட்டிப்பார்க்க எத்தனிப்பதில்லை.

தோல்வியடைந்தால் மறுகணமே தற்கொலை செய்து விட வேண்டும் என்று புரட்சிகர கொள்கை பரப்புபவர்களும் ஒருபடி மேலே செல்ல ஒரு போதும் கனா காண்பதில்லை.

"தோல்வியே வெற்றியின் படிக்கற்கள்" என்பதை எம்மில் பலர் ஏனோ யதார்த்தமாக்க முனைவதில்லை.

உண்மையிலும் உண்மை என்னவென்றால் மனதில் கனம் இருந்தால், பயம் இருந்தால், சந்தேகம் இருந்தால் ஒரு வேலையிலும் கவனம் செலுத்த முடியாது, புதிதாக சிந்திக்கத் தோன்றாது. மாறாக எல்லா தருணத்திலும் கவனக் குறைவு முந்திக்கொள்ளும். யார் வந்தாலும் புதிய சத்தங்கள் ஒலித்தாலும் திகில் வந்து குடிகொள்ளும்.

ஆகவே தான் "ஆழம் அறிந்து காலை வை" என்ற தத்துவம் எமக்கு பல படிப்பினைகளை தருகின்றது. பல தருனங்களில் மனதில் ஏற்படும் பாரத்திற்கும், பயத்திற்கும், சந்தேகங்களுக்கும் நாம் ஆட்களை அறிந்து, செயல்களைப் புரிந்துகொண்டு முன்மதியோடும் எதிர்நோக்கோடும் செயல்படாததே காரணமாக அமைகின்றன.


மனிதனுடைய மனம் குரங்கைப் போன்றது என்று ஏன் சொன்னார்கள்? எப்படித்தான் அறிவிருந்தாலும் அனுபவம் இருந்தாலும் ஆசை வார்த்தைகளும், கவர்ச்சியின் உந்துதலும், எளிதில் நம்பிவிடும் பலவீனத்தினாலும், சுயநலத்தினாலும் மனிதர்கள் நாம் படு குழியில் விழுந்து விடுகின்றோம்.

படுகுழியில் விழுந்த பிற்பாடுதான் எதிரியின் நம்பிக்கைத் துரோகமும், சதி வலையின் வியூகமும் எவ்வளவு தந்திரமானது, பாரதூரமானது என்பதைப் புரிய முடிகின்றது.

இது இப்படி இருக்க கூட இருந்தே குழிபறிக்கும் சதிகார ஒட்டுண்ணிகளைத்தான் இனம் காண முடிவதில்லை. நாய் மேல் சொகுசு சவாரி செய்து கொண்டே உயிரைக் குடிக்கும் உண்ணிகளைக் களைவதில் கண்ணும் கருத்துமாக இருக்க சாதுரியங்களைப் பழகிக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

இதற்காகத்தான் வேதாகமம் நமக்கு "பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப் போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள்" (மத் 10:16) என்பதைக் கற்பிக்கின்றது. பலவீனம் உடையவர்களாகவும், பக்குவம் அற்றவர்களாகவும் பல தடவைகளில் நாம் இருக்கின்றோம் என்பதை மனத் தாழ்ச்சியோடு முதலில் ஏற்றுக் கொண்டு இறைவனையே பற்றிப் பிடிப்போம். "உம்மை விட்டுப் பிரிந்து என்னால் எதுவும் செய்ய முடியாது" என்பதையே செபமாகக் கொண்டு இவ்வுலகை வெற்றி கொள்வோம். அனைத்துக் கஷ்ட துன்பங்களையும் இயலாமைகளையும் இறைவன் பாதத்தில் ஒப்படைத்துவிட்டு வீறு நடை போடுவோம்.

**மறுமடலிலும் கலக்க ஆசைகளுடன்....** *- ஆசிரியர் -*



## இறைவாக்கு

**"கடவுள் நமக்கு அடைக்கலமும், ஆற்றலுமாய் உள்ளார்; இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே"**

*(திருப் 46-1)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி நெஞ்சில் நிலைப்பவர் ஒரு சிலரே. ஈழமணித்திரு நாட்டிலே ஈழத்தமிழர் வரலாற்றில் 20ம் நூற்றாண்டில் இருவர் புகழ்பூத்த நாயகனாக விளங்குகின்றனர். இறை நம்பிக்கையுடன் அரசியல் ரீதியாக ஈழத் தமிழரின் உரிமைக்காக வேண்டி நின்ற நாயகம் தந்தை செல்வநாயகம். ஈழத் தமிழினத்துக்குத் தனித் துவம் உண்டு. தனித்துநிற்கச் சக்தி படைத்தவன் தமிழன் விளைவால் அன்னைக்கு அடிகள் அணிவித்த ஆரங்களையும் அளவிட அளவுகோல் இன்றித் தவிக்கின்றேன். வெளிநாட்டவரும் தமிழ் அன்னை யின் அமிழ்து சுவைத்துத் தலைவணங்க வேண்டு மென்ற பாரதியின் கனவை உலகத் தமிழாய்வின் தந்தை தனிநாயகம் நனவாக்கினார். இவரால் தமிழி னம் பெருமையுற்றது. ஈழநாடு இணையற்ற புகழை யீட்டியுள்ளது. யாழ் புனித பத்திரிசியார் கல்வி

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

என்று உலக அரங்கில் வரலாற்றுக் கலாசார இடத் தைக் கொடுத்த நாயகம் - தனிநாயகம் அடிகள்.

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளின் திருப்பெயரை நினைக்கும் தோறும் செந்தமிழின் பழமையும், இனிமையும், பெருமையும், புதுமையும் பண்பாடும் பறைசாற்றும் சிகரமாகத் தரணியில் தனித்துவமிக்க தமிழாய்வின் தன் நிகரில்லா நிறுவனமாக அவர் திகழுகிறார். முற்றும் துறந்த முனிவனுக்குத் தமிழ்மேல் கொண்ட அதீத காதலைத் துறக்கமுடியவில்லை. இதற்கு அடிகளின் அமுதவுரையே தக்க சான்றாகும். வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் "கண்கள் பஞ்சடைந்து போகிறது. கால்கள் மறுக்கின்றன, ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது" என்றார். தமிழ் கூறும் நல்லுலகில் வழக்கிலிருந்த இன்பத் தமிழ்மொழியை அகிலத்தில் அரியாசனம் ஏற்றிச் சக்திவாய்ந்த உலகமொழிகளுடன் சரியா சனம் பெற வழிசமைத்த பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளே என்பது மிகையாகாது.

தவத்திரு கலாநிதி தனிநாயகம் அடிகள் பூரண உந்து சக்திமிக்க ஆளுமையுடைய பண்பாட் டின் பெட்டகமாகத் திகழ்ந்தார். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்பது திருமூலரின் திருவாக்கு. இதற்குத் தனிநாயகம் அடிகள் இலக்கணமாகத் திகழ்ந்தார். இன்று (01.09.2007) இவர் இறைபத மடைந்து 27 ஆண்டுகள் உருண்டோடினாலும் கன்னித் தமிழுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் தனிநாயகம் அடிகள் ஆற்றிய மாபெரும்பணியை கால மெல்லாம் நன்றிப் பெருக்குடன் இவ்வுலகில் கடைசித் தமிழன் வாழும்வரை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளான். தனிநாயகம் அடிகள் தமிழ் அன்னைமேல் கொண்ட அதீத பாசத்தையும் அதன்



அன்னை தாம் ஈன்ற ஆன்றவிந்த சான்றோரா கிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் பன் மொழி மேதை தவத் திரு தாவீது அடிகள், உலகம் போற்றும் தமிழ்த் தூது தனிநாயகம் அடி கள் ஆகியோரால் இம யத்தின் உயர புகழாரம் பெற்றாள்.

"நேற்று என் பது உடைந்த பானை, நாளை என்பது மதில்மேல் பூனை, இன்று என்பது மீட்கும் வீணை" என ஓர் அறிஞர் கூறியுள்ளார். சொல்லின் வேந்தன் தனிநாயகம் அடிகள் தரணியில் தமிழுக்கும் திரு மறைக்கும் ஆற்றிய மாபெரும் பணியை நாம் மீட்டுப் பார்ப்பது சாலவும் சிறந்தது. தமிழுக்கு மலை யளவு பெரும் தொண்டு புரிந்த தவமுனி தனிநாயகம் அடிகளைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகத் தருவதில் புளகாங்கிதமடைகிறேன்.

**பதி**

பசுந்தீவு எனப்படும் நெடுந்தீவில் ஆசிரியத் திலகம் இஸ்ரனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளைக்கும், உத்தம வாழ்க்கைத் துணைவி சிசில் இராசம் மாவுக்கும் கருவிலே திருவுடையராக சேவியர் தனிநாயகம் 1913.08.02 இல் பிறந்தார்.

**படிப்பு**

இவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்வியிலும், தெய்வ ஞானத்திலும், ஒழுக்கத்திலும், விளையாட்டுத் துறையிலும் அதி உன்னத மாணவனாகத் திகழ்ந் தார். "ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(புனித. லூக். 14:26) என்ற சவாலுக்கு இதோ நான் சரணடைகிறேன் என்று தனிநாயகம் அடிகள் உலகைத் துறந்து குருத்துவப்பயிற்சி பெற 1931-1934வரை கொழும்பு புனித பேணாட் குருமடத்தில் பயின்றார். இவருக்குச் சோதனைகள், வேதனைகள் தொடர்கதையாகயிருப்பினும் துவண்டு போகாமல் இறைவனின் கரம் இவரை வழிநடத்தியது. தவத்திரு தாவீது அடிகளின் நெறிப்படுத்தலினாலும் இந்தியாவின் முதலாவது சுதேசி ஆயர் றோச் ஆண்டவரின் ஆதரவும் அரவணைப்பும் கிடைத்ததினாலும் குருத்துவ சிறப்புப்பயிற்சியை உரோமாபுரியில் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் பெற்று 1938-03-19 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 25 வயதில் திருமறைக் கலாநிதி பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கிலமொழிகளில் முதுகலைமானி (M.A) இலக்கிய முதுமானி (M.Litt) இலண்டனில் கல்வியியல் கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றார். திருநகரில் 43 நாடுகளைச்சேர்ந்த குருத்துவ மாணவர்களுடன் படித்ததினால் இவருக்கு பன்னாட்டுச் சமூக உறவு வலுப்பெற்றது. இவர் தூத்துக்குடியில் ஆயர் றோச் ஆண்டவரின் கீழ் 1940-1945வரை ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், குருத்துவப் பணியிலும் மும்முரமாக உழைத்தார். ஆங்கில மொழிச் சூழலில் இவர் உருவாக்கப்பட்டிருப்பினும் அன்னை மொழியின் மேல் அதீதப்பற்றுக் கொண்டு அங்கு பிரத்தியேகமாக பண்டிதர் குருசாமியிடம் இவர் முறையாகத் தமிழ்பயின்று தமிழில் அதீத புலமை பெற்றார்.

**படிப்பித்தல்**

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனிசிறந்தனவே" என்ற பாரதியின் கூற்றை உய்த்துணர்ந்த தனிநாயகம் அடிகள் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித்தத்துவ விரிவுரையாளராகவும் 1951-1961வரை கற்பித்தலில் ஈடுபட்டார். இவர் மேற்குலக நாடுகளில் மலாயாப் பல்கலைக் கழகத்தில் 1961-1969வரை பேராசிரியராக இந்தியக் கலைகள் - கலைத்துறைப் பீடாதிபதியாகப் பணிபுரிந்தார். 1970 - 1971 வரை பேராசிரியராக - இந்தியக் கலைகள்- பாரீஸ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றினார். 1971-1972 வரை நேப்பிள்ஸ் பல் கலைக்கழத்திலும் சேவையாற்றினார்.

**பாண்டித்தியம்**

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் 15 மொழிகளில் வல்லுநராகவும் 30 மொழிகளில் பரீட்சயமுடையவராகவும் மொழிப்புலமையினால் சொல்வேந்தராகவும் திகழ்ந்தது இறைவன் இவருக்கு அளித்த சிறப்புக் கொடையாகும். உலகிலுள்ள செம்மொழிகளில் தமிழ் ஒன்று மட்டுமே இன்றைய நவீன மொழியியலாளர்கள் வகுத்துள்ள 11 கோட்பாடுகளுக்கும் ஏற்புடையது என்ற உண்மையை முன்னோடியாக எடுத்துரைத்தவர். அகிலம் முழுவதும் தரிசித்து தமிழின் மகிமையையும் பெருமையையும் செயல் உருப்படுத்திய கர்மவீரர் தனிநாயகம் அடிகள் என்றால் அது மிகையாகாது

**பதிப்பித்தல் பணி**

இவரின் நூல்கள் : தமிழில்

- ஒன்றே உலகம் (பிரயாணக்கட்டுரைகள்)
- தமிழ்த்தூது (கட்டுரைத்தொகுப்பு)
- வேறுபல நூல்களில் ஆராய்ச்சிக்கட்டுரைகள்

இவரின் நூல்கள் : ஆங்கிலத்தில்

- தமிழ்ப்பண்பும் நாகரீகமும் (இலண்டன்)
- வெளிநாடுகளில் தமிழ்மொழி (மலாயா)
- தமிழ் கற்பதற்கான கைநூல் (மலாயா)
- இயற்கையும்புலமையும்- தமிழ் இலக்கியங்களில் - பம்பாய்
- கார்த்தூசியன் குருகுலம் (அமெரிக்கா)
- வேறுபல நூல்களில் ஆராய்ச்சிக்கட்டுரைகள்

சங்க இலக்கிய ஆய்வுபற்றிய தனிநாயகம் அடிகளின் நூலைத் திறனாய்வு செய்த பேராசிரியர் கமில்சுவலபில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"பழந்தமிழ் இலக்கியங்களைப்பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தையும் இந்நூல் பலவகையிலும் விஞ்சிநிற்கின்றது"

**பதிப்பாசிரியர்**

பிரதம ஆசிரியராக - தமிழ்க்கலாசாரம் (ஆங்கிலம்) முத்திங்கள் வெளியீடு 1952-1967, தமிழ்ப் போர்த்துக்கீய அகராதி 1969, தமிழ்க்லை வர்த்தமானி 1969.

தனிநாயகம் அடிகள் பிரபல சொற்பொழிவாளரும், பல கழக அமைப்பு நிறுவுநரும். அவற்றில் 1953இல் உருவான அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே மணிமகுடமாக மிளிர்கின்றது.

தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை தனிநாயகம் அடிகள் மறைவதற்கு நான்கு மாதங்களுக்குமுன் 28-04-1980இல் எழில் நகராகிய யாழ் நகரில், வீரசிங்கம் பெரியாரின் மண்டபத்தில் அழகுதமிழில் அன்பர்களின் உள்ளங்கள் எல்லாம் கொள்ளை கொண்டதாக ஆற்றினார் இனிய அவ் உரையின் சிறுதுளியைச் சுவைத்தால் உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும். தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்களும் (RESEARCH IN TAMIL STUDIES RETROSPECT AND PROSPECT) என்ற சிறிய ஏட்டின் பக் 24 இல் "தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். அவற்றை நம்மிலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. ஆதலால்தான் புறநானூற்றில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றும் வள்ளுவத்தில் 'யாதானும் நாடாமல் ஊராமல்' என்றும் குறிப்பிட் டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என்கடன் பணிசெய்துகிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்று கூறலாம்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

01-09-1980இல் யாழ் மரியன்னை பேராலயத்தில் நானும் எனது குருநாதர் பன்மொழி மேதை தவத்திரு கலாநிதி தாவீது அடிகளும் தனிநாயகம் எனும் தமிழின் மாபெரும் இமயமலை சரிந்ததைவிட்டு கண்ணீர் சொரியும் வேளை அடிகள் தமிழுக்கும் திருமறைக்கும் ஆற்றிய பெருந்தொண்டை நினைவு கூரும் பொழுது, தனிநாயகத்தின் பசுமையான தோற்றம், ஒளியுமிழும் கண்கள், புன்னகை தவழும் மலர்ந்த முகம், எடுப்பான உயர்ந்த தோற்றம், தூய வெண்ணிற ஆடை, குரு என்ற முழுமை, தமிழே உயிர் என இறுதிவரை உழைத்த பேரறிஞரின் பூதவுடல் அழிந்தாலும் புகழ் உடம்பு என்றும் அழிவதில்லை என உய்த்துணர்ந்தேன். தனிநாயகம் அடிகள் காட்டிய பாதையிலே இன்றைய நவீன உலகில் கன்னித்தமிழுக்குக் களங்கம் ஏற்படாத முறையில் காவலராகவும் தொண்டராகவும் பணி புரிவது தமிழர் ஒவ்வொருவரின் கடமை எனச் சிந்தித்து செயலாற்ற மனமகிழ்வுடன் முன் வாரீர். தனிநாயகத்தின் ஆன்மா சமாதான ஒளியில் ஒளிர்வதாக.

**துரை ஆரோக்கியதாசன் B.A.P.G.D.E.**
முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை

## மனித குடும்பம் – அமைதியின் குழுமம் 2008ம் ஆண்டுக்கான உலக அமைதி தினச் செய்தியின் கருட்பொருள்



மனித குடும்பம் அமைதியின் குழுமம் என்ற கருத்தை அடுத்த ஆண்டினுடைய உலக அமைதி நாளின் கருத்தாக திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தேர்ந்தெடுத்துள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

ஜூன் 19ல் வத்திக்கான் வெளியிட்ட குறிப்பில் இந்த உலகத்தில் மக்கள் அனைவரும் இறைவனால் படைக்கப்பட்ட பெரிய குடும்பத்தில் நானும் ஒருவர் என்ற விழிப்புணர்வு பெறுவது, உலகளாவிய ஒருங்கிணைப்பு நெருக்கடியைச் சந்திப்பது, மற்ற தீவிரமான பிரச்சினைகள் என்றும் தெரிவித்தது.

திருத்தந்தை இந்தக் கருத்தை தேர்ந்தெடுத்ததன் முக்கிய காரணம் பொது விதியினுடைய அறிவு மற்றும் ஒற்றுமையின் அனுபவமும், பொதுநன்மை மற்றும் மானுடத்தினுடைய அமைதியை உணர்வதற்கான முக்கிய காரணிகள் ஒன்பதும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி ஈழத்துப் புராடனாரின் இயேசு கீதை



## இரண்டாவது கறையோகம் எனும் பாவயோகம்

### சகோதரக் கேடு
**இறைவார்த்தை : மத்தேயு: 5:22**

உடன் பிறந்தான் மேற்கோபம் உண்டெனின் அதுநியாய
திடவிசாரணைக் கேதுவாங் குற்றம் - தடம்பிரண்டு
உதவாதவன் என்னிலது உணர்கவே ஆலோசனை
பதவிசாரணைக் குற்றமாம் பதி
தாயின் கருப்பையில் தங்கியிருந்த உன்போலொரு
சேயின் சகோதரனை மதிகேடன் - ஆனவனே
என்பாயில் ஆளாவாய் எரிநரக ஆக்கினைக்கு
என்றிட்டார் இயேசு இறை

### நிவாரணம்
**இறைவார்த்தை: மத்தேயு: 5:23-24**

இத்தன்மை வாய்ந்து இருப்பாயே யாமாயின்
சத்தியத்து ஆலயஞ் சார்ந்து - துத்தியமும்
காணிக்கையுஞ் செலுத்துமுன் கடுகி அவனோடு நாணி
ஒப்பு உறவாதல் நலம்.

### விபசாரக் கேடு
**இறைவார்த்தை: மத்தேயு: 5:27-28**

மாமிச இச்சையுடன் மனம் பிறழ்ந்து மாதருடன்
காமச் செயல்செய்யும் விபசாரம் - தாமினவில்
இச்சையுடன் பார்ப்பான் இதயத்தில் அவருடனே
அச்செயலை செய்கின்றான் அறி

### நிவாரணம்
**இறைவார்த்தை: மத்தேயு: 5:29-30**

காமக் கேட்டிற்கு கண்ணுடந்தை ஆனலதை
சேமத் திற்காகப் பிடிங்கியெறி - ஆமாமதால்
உன்னுடல் நகரத்தின் ஓங்குமெரி வீழ்தலிலும்
நன்மையே ஒன்றிழத்தல் நவில்
இடறலுக்கு உன்கை ஏதுவாகத் தானிருப்பின்
உடனதனைத் தறித்தெறிந்து உதறு - தடம்மாறி
படுகுழி நரகத்தின் பள்ளத்தில் வீழ்வதிலும்
விடுதலை யாவதுவே விறல்

### தள்ளுதற் சீட்டு
**இறைவார்த்தை: மத்தேயு: 5:27, லூக்கா: 18:18**

தன்னுடலிற் பாதியாந் தாரமென வந்தவளை
உன்னுடைய வெறுப்பாலே ஒதுக்கி - முன்னவனின்
சந்நிதியிற் செய்த சத்தியத்தைப் புறந்தள்ளி
அந்நியமாய் ஆக்கிவிடல் அநீதி
இவ்வாறு ஆண்புரிந்தால் இதற்கவன் விலக்கல்ல
அவ்வாறு அவனும் விபசாரி - எவ்வாறோ
தள்ளுவதற்கு விரும்பும் தையலும் விபசாரி
உள்ளுகுவே உண்மையிது உணர்

### பொய்யாணை
**இறைவார்த்தை: மத்தேயு: 5:33-37**

பொய்யாணை இடாதெனவே பொருந்தியே கர்த்தருக்குள்
செய்திட்டதில் மேலுஞ் சேறிச் - செய்யாதே
சத்தியமே வானத்தின் சார்பானால் அது இறைவன்
நித்திய சிக்கான நிலை
பூமியை நோக்கியும் புகலாதே அது கர்த்தர்
புனிதவடி பதிக்கும் புரம் - சாமியவர்
வாசமுறை ஆலயத்தில் வையாதே அஃதிறைவன்
நேசமுள்ள திருநகராந் தெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவற வாழ்வில் பொன்விழாக் காணும் மண்ணின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரான

## அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ்

- தமிழ் நேசன் அடிகள் -



அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்கள் மன்னார் மண்ணின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவர். மனித நேயம் மிக்க பண்பாளர்; அறிவுச்சுடர்; நாவன்மை மிக்க சிறந்த பேச்சாளர்; இறை மனித உறவுக்கு இலக்கணம் வகுப்பவர்; அனைத்து மக்கள் மத்தியிலும் இணைப்புப் பாலமாகத் திகழ்பவர்; பல ஆங்கில நூல்களின் ஆசிரியர்; டிலாசால் சபைச் சகோதரர்களின் விடிவெள்ளி! இத்தகைய சிறப்புகளைக் கொண்ட அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் இன்று தனது துறவற அர்ப்பண வாழ்வில் 50 ஆண்டுகளைப் பூர்த்திசெய்து பொன்விழாக் காண்கிறார்.

மன்னார் மாவட்டத்தின் முதுபெரும் கத்தோலிக்க கிராமமாகிய வங்காலையைச் சேர்ந்த திரு. திருமதி. செபஸ்ரியான் குரூஸ் தம்பதியினர் தமது அரசபணியின் நிமித்தம் மன்னார்த் தீவில் குடியேறி வாழ்ந்தனர். இவர்களது பெருமை விளங்க 01.06.1939ம் ஆண்டு பிறந்தவர்தான் அருட்சகோதரர் பப்ரிஸ்ற்.

மன்னாரில் இருந்த புனித சூசையப்பர் சபைத் துறவிகளின் வழிகாட்டலில் வளர்ந்த இவர், தனது இடைநிலைக் கல்வி, உயர்கல்வி ஆகியவற்றை அக்காலத்தில் புனித சவேரியார் ஆங்கிலக் கல்லூரி நிர்வாகத்தைக் கொண்டு நடாத்திய அருட்தந்தையர்கள் மற்றும் அவர்களைத் தொடர்ந்து கல்லூரியைப் பொறுப்பேற்ற புனித டிலாசால் சபைச் சகோதரர்கள் ஆகியோரின் நெறிப்படுத்தலில் நிறைவு செய்தார்.

இந்த டிலாசால் சகோதரர்களின் அன்பும், அரவணைப்பும், ஆளுமைப் பண்புகளும், ஒழுக்க நெறிகளும், இறைபக்தியும் இளைஞன் பப்ரிஸ்ரைக் கவர்ந்திழுத்ததில் ஆச்சரியமில்லை. உயர் கல்வி, சிறந்த உத்தியோகம் போன்றவற்றிற்கான வாய்ப்புகள் ஒருபுறம், துறவற அழைப்பு மறுபுறம்! சிந்தித்தார்; செயற்பட்டார்! தனது 17வது வயதில் டிலாசால் சகோதரர்களின் துறவறப் பயிற்சியகம் நோக்கி அடியெடுத்து வைத்தார். 20ம் வயதில் முதல் அர்ப்பணத்தையும், 25ம் வயதில் நித்திய அர்ப்பணத்தையும் செய்தார்.

இவரது அறிவுத்திறனையும், ஆளுமை விருத்தியையும், இறைபக்தியையும், தமது டிலாசால் துறவற சபையின் மட்டில் கொண்ட பற்றையும் இனங் கண்டுகொண்ட சபையின் தலைமைப் பீடத்தினர் பல்வேறு துறைகளிலும் இவர் உயர் கல்வியை மேற்கொள்ள ஊக்குவித்தனர்.

அதன்படி 1965ல் கொழும்பில் இதழியலில் டிப்ளோமா பயிற்சி நெறியையும், 1969ல் பிரான்ஸ் நாட்டுப் பாரிஸ் நகரில் மறைக்கல்வியில் டிப்ளோமா பயிற்சி நெறியையும், 1973ல் பாகிஸ்தான் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், பிரான்சிய மொழி, ஜேர்மன் மொழி ஆகியவற்றில் இளங்கலைமானிப் (B.A) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 1977ல் உரோமாபுரியில் லசாலியன் ஆன்மீகத்தில் (Lasalian Spirtuality) விசேட பயிற்சியை மேற்கொண்டார். 1989ல் பெங்களூரில் இறையியலில் மூன்று மாதப் பயிற்சியை மேற்கொண்டார். 1991ல் கொழும்பில் (I.S.F.A) மறைக்கல்வியில் முதுகலைமானி (M.A) பட்டத்தையும் இறுதியாக 1993ல் பிலிப்பைன்ஸ் மணிலாவில் கல்வியியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இத்துடன் இவரது கல்வி முடிவடைந்துவிட வில்லை. "ஓர் ஆசிரியர் என்பவர் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கும் மாணவன்" என்பதைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு தொடர்ந்து அறிவுத் தேடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

இவர் பன்மொழி வித்தகராகத் திகழ்கின்றார். 14 வருடங்கள் பாகிஸ்தானில் மறைபரப் பாளராகப் பணியாற்றிய இவர் உருது, பஞ்சாபி, இந்தி ஆகிய மொழிகளில் சிறந்த பாண்டித்தியம் பெற்றுள்ளார். அத்துடன் ஐரோப்பிய மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகியவற்றில் சிறந்த புலமை மிக்கவர். இத்தாலியம், ஸ்பானியம் ஆகிய மொழிகளில் ஓரளவு தேர்ச்சி உடையவர்.

இதுவரை இவர் ஐந்து ஆங்கில நூல்களை எழுதியுள்ளார். "Value Education", "Laugh off Your Problems", "Reaching for the Stars", "Reflections", "Lilies and Roses" ஆகியவையே இவர் எழுதிய நூல்களாகும். இவற்றுள் ஒரு நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வெளிவரும் ஆங்கில வாராந்த கத்தோலிக்கப் பத்திரிகையான 'த மெசஞ்சர்' (The Messenger) என்ற பத்திரிகையில் இளைஞர்களுக்கான பகுதியில் "அருட்சகோதரர் பப்ரிஸ்ற் இளவயதினரோடு பேசுகிறார்" (Brother Baptist talks to Teen Ages) என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை எழுதி பலரது பாராட்டையும் பெற்றார்.

தற்போது டெய்லி நியூஸ், டெய்லி மிரர், தி ஐலண்ட் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளில் இன்றைய இனவன்முறைச் சூழலில் சமாதானத் திற்கான தேடலாக தன் ஆழ்ந்த கருத்துகளை வெளிப்படுத்தி எழுதி வருகின்றார். நடுநிலையாகச் சிந்திக்கக்கூடிய சிங்களப் புத்தி ஜீவிகள் மத்தியில் இவரது ஆழமான, தத்துவார்த்தமான கருத்துகள் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன எனலாம்.

சமாதானம், ஒப்புரவு ஆகிய உயர்ந்த விழுமியங்களில் ஆழமான நம்பிக்கைகொண்டு இவற்றையே தன் வாழ்வின் கொள்கையாகவும் தாரக மந்திரமாகவும் கொண்டு வாழ்ந்து வருகின்றார். ஒப்புரவும் சமாதானமுமே அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு என்பதில் இவர் திடமான நம்பிக்கை கொண்டுள்ளார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் இவர் தடம் பதித்த பணித்தளங்களோ பற்பல. 14 வருடங்கள் பாகிஸ்தானில் மறைபரப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் பாகிஸ்தானிலுள்ள வைசலாபாத் மறைக்கல்விப் பயிற்சி நிலையத்தின் இயக்குனராக 8 ஆண்டுகளும், தமது டிலாசால் சபையின் பிராந்திய முதல்வராக 6 ஆண்டுகளும் பணியாற்றினார். மூன்று தடவைகள் இவர் இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் டிலாசால் சகோதரர் களின் மாகாண முதல்வராகவும் (Provincial), இரண்டு தடவைகள் இலங்கை துறவறசபை முதல்வர்கள் பேரவையின் தலைவராகவும் (C.M.R.S - President of the Council of Major Religious Superiors) இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். 1994ல் கொழும்பில் லசாலியன் ஆங்கிலக் கல்வியகத்தை (Lasallian English Academy) நிறுவி அதன் இயக்குனராக 7 ஆண்டுகள் நிர்வகித்து வந்தார். 1999ல் 'சன்வோ' (SUNFO) எனப்படும் 'இலங்கை - ஐக்கிய நாடுகள் சபை நட்புறவுச் சங்கத்தை' இவர் ஏற்படுத்தி அதன் தலைவராக இருந்து சிறப்பாகச் செயலாற்றி வருகின்றார். இலங்கையில் சமாதானம் மற்றும் ஒப்புரவைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குகின்ற அமைப்பாக இச்சங்கம் இருக்கின்றது. 2005ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதி உலக சமாதானத்திற்கான அனைத்துலக அமைப்பு "சமாதானத்தின் தூதுவர்" (Ambassador for Peace) என்ற விருதை வழங்கி இவரைக் கௌரவித்தது.

இத்தகைய சிறப்புப் பட்டங்களுக்கும், உயர் பதவிகளுக்கும் சொந்தக்காரரான அருட் சகோதரர் பப்ரிஸ்ற் அவர்கள் பணிவுடன், அனைத்துத் தரப்பினருடனும் சரளமாகப்பழகும் பண்பு கொண்டவர். மனித நேயத்தை மிகவும் போற்றி மதிப்பவர். பாரதியின் பாடலைப்போல் "யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய், யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய்" திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

இவர் ஆசாரம் தவறாத கத்தோலிக்க துறவியாக விளங்கினாலும் கற்றவர், கல்லாதவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தர், ஏழைகள், பெரியோர், சிறுவர்கள் போன்ற பல தரத்து மக்களுடனும் மிகுந்த மரியாதையாகப் பழகுபவர். அனைவருக்கும் இனிய நண்பராக விளங்குகின்றார். பல்லாண்டுகள் வெளிநாடுகளில் பணியாற்றியமை, பன்னாட்டுக் கலாசாரங்களில் கொண்ட ஈடுபாடு, பன் மொழிப் புலமை, கல்வித்துறையில் பெற்ற உயர் பட்டங்கள், "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற உலகளாவிய சகோதரத்துவ சிந்தனை போன்றவையே இவரிடத்தில் காணப்படும் இத்தகைய அருங்குணங்களுக்கு வித்திட்டுள்ளன எனலாம்.


இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட மன்னார் மண்ணின் மைந்தர் தற்போது மன்னாரைத் தளமாகக்கொண்டு தனது பணிகளை அமைதியாக, எளிமையாக ஆற்றிவருகின்றார். அருட்சகோதரர் உடல், உள நலம் பெற்று நீண்ட ஆயுளோடு பல்லாண்டுகள் வாழ இறையாசீர் வேண்டுகின்றோம். பொன்விழா வாழ்த்துக்களையும் கூறுகின்றோம்.

# கொலைகளை நிறுத்துங்கள்

உலகில் ஆயுதப் போட்டிகள் புறக்கணிக்கப்பட்டு சண்டையை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமாறு மீண்டும் உருக்கமாக அழைப்பு விடுத்தார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற்.

இத்தாலிக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையே உள்ள மலைப்பகுதியில் முதல் உலகப்போர் தொடங்கியதைக் குறிப்பிட்டு அந்தச் சண்டைகளின் சுவடுகளை இன்னும் இந்த மலைப் பகுதியில் காணமுடிகின்றது என்றார். இந்தப் பயனற்ற இரத்தம் சிந்துதலும், கொலைகளும் நிறுத்தப்பட வேண்டுமென்று போரிட்ட நாடுகளின் தலைவர்களுக்கு திருத்தந்தை 15ம் பெனடிக் 1917ம் ஆண்டு அழைப்பு விடுத்ததையும் சுட்டிக் காட்டினார்.

திருத்தந்தை 6ம் பவுலும், திருத்தந்தை 2ம் ஜோன் பவுலும் சண்டை ஒரு போதும் வேண்டாம் என்று அழைப்பு விடுத்தனர். இவர்களின் குரல்கள் மறக்கப்பட்டு விடக்கூடாது.. மனித சமுதாயம் இறைவனோடும், ஒருவர் மற்றவரோடும் அமைதியில் வாழ்ந்தால் இவ்வையகம் உண்மையிலேயே பேரின்ப உலகமாகக் காட்சி தரும். எனவே, பயனற்ற கொலைகள் நிறுத்தப்படட்டும். உலகில் அமைதி நிலவட்டும் இவ்வாறு திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அழைப்பு விடுத்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இலங்கையில் வெளியான செய்தித் தாள்கள்




1937ல் இலங்கையில் முதலாவது அச்சகம் சமயசார்பான விடயங்களை அச்சிடுவதற்காக ஒல்லாந்தரால் நிறுவப்பட்டது. பிரித்தானியரால் அரசாங்க அறிவித்தல்களை அறிவிப்பதற்காக 1802 மாச்சு 15இல் இலங்கை அரசின் வர்த்தமானி வெளியீடு ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

1948ல் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட், ரைம்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட் மற்றும் த வீரகேசரி லிமிட்டெட் என்ற மூன்று முக்கிய செய்தித்தாள்கள் ஆரம்பமாகின.

முதலாவது சிங்கள செய்தித்தாளாக லங்காலோக 1860இல் காலியில் உள்ள அச்சகத்தில் இருந்து வெளியானது. 1862 செப்தெம்பர் 11இல் லக்மினிபகன என்ற சிங்கள செய்தித்தாள் வெளியானது.

தமிழில் வெளியான செய்தித்தாள்கள்

| | |
|---|---|
| <u>உதயதாரகை</u> | (1841) (முதன் முதல்) |
| பாலிய நேசன் | (1865) |
| இலங்கை பாதுகாவலன் | (1868) |
| அலாமத் லங்காபுரி | (1869) |
| முஸ்லிம் நேசன் | (1882) |
| சிவமணி | (1884) |
| ஈழகேசரி | (1930 - 1950 வரை) |
| இஸ்லாம் மித்திரன் | (1905 - 1940 வரை) |
| தினகரன் | (1932 - தற்போதுவரை) |
| வீரகேசரி | (1930 - தற்போதுவரை) |
| தினபதி | (1966 - |
| ஈழநாடு | (1959 - |
| சிந்தாமணி | (1966 - |
| தின முரசு | |
| மித்திரன் | |
| தொண்டன் | |
| வெட்டாப்பு | |

தொழிலாளி என்று பரந்து செல்கிறது.

ஆங்கிலச் செய்தித் தாள்களாக

| | |
|---|---|
| த கொழும்பு ஜேணல் | 1832 |
| த ஒப்சேவர் | 1834 |
| சிலோன் குறனிகிள் | 1837 |
| த சிலோன் ஹெறால்ட் | 1837 |
| த சிலோன் ரைம்ஸ் | 1846 |
| த மோனிங் லீடர் | 1907 |
| த சிலோன் டெயிலி நியூஸ் | 1918 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த சிலோன் ஒப்சேவர் 1923
இவ்வாறு செய்தித் தாள்கள் விரிந்து செல்கின்றன.

குறிப்பு :- உலகில் முதல் முதல் வெளியான செய்தித் தாள் 6ம் நூற்றாண்டில் "டசிங்பர்" (அரச செய்தித் தாள்) சீனாவின் தலைநகரான பீஜிங்கில் வெளியானது.

உலகில் அதிக பக்கங்களைக் கொண்ட பத்திரிகை "த நியூயோர்க் டைம்ஸ்" என்ற செய்தித் தாள். 946 பக்கங்கள் கொண்டது. 1965ல் வெளியானது. இதன் விலை அரை அமெரிக்க டொலர்.

பிளாஸ்ரிக் பத்திரிகை இத்தாலியில் வெளியாகிறது மழையிலும் படிக்கலாம்.
மிகச் சிறிய பத்திரிகை ரோம் நகரில் வெளியாகிறது "டியோடியோ டிரோமா"
நீளம் 12.7 C.M
அகலம் 6.8 C.M
அதிகம் விற்பனையாகும் பத்திரிகை - ஜப்பான் நாட்டு தினசரி "யோமுரி ஷிம்பன்" தினம் 14 கோடிப்பிரதிகள் விற்பனையாகிறது.

- வயலற் சந்திரசேகரம் -

## சவுல் பவுலானார்!

- தமிழ் நேசன் -

வெண்ணிறக் குதிரை ஒன்றில்
செந்நிற விழிகள் கொண்டு
பறந்து சென்றான் சவுல் - தன்னை
மறந்து விரைந்தான் வீதியில்.

மின்னலென ஒளிவெள்ளம் பாய்ந்தது
இன்னலொன்று நேர்ந்ததை உணர்ந்தான்.

குதிரை நிலைகுலைந்து மருண்டது
சவுலின் கண்கள் இருண்டது
கண்களில் கண்ணீர் திரண்டது.

"சவுல் சவுலே" என்ற
சத்தத்தைக் கேட்டுத் துணுக்குற்றான்.

"யார் நீர்?" என்றான் சவுல்
"நீ துன்புறுத்தும் இயேசுதான் நான்"
என்றது குரல்.

தடுமாறிய அவன் வாழ்வு
அப்போது தடம் மாறியது.

சவுல் பவுலானார்!

இங்கே விடைகாணா
வினாவொன்று!

சவுல்
இயேசுவைத் தேர்ந்துகொண்டாரா?
அல்லது
இயேசு
சவுலைத் தேர்ந்துகொண்டாரா?



## இன்று நீ நாளை நான்




அமெரிக்க ஜனாதிபதியாகப் புகழுடன் விளங்கியவர் ஜோன் எஃப் கென்னடி. அவர் வெள்ளை மாளிகையில் தம்மைக் காண வந்திருக்கும் பார்வையாளர்களுடன் நாள் தோறும் சில நிமிடங்கள் செலவிடுவார். தம்மைப் பார்க்க வந்திருந்த இளைஞர்கள், பள்ளி மாணவர்களுடன் சிறிது நேரம் பேசுவார்.

பார்வையாளர்களில் "பளிச்" என்ற புன்னகையுடன் இருந்த மாணவன் கன்னத்தைத் தட்டி "உன் எதிர்கால இலட்சியம் என்ன?" என்றார் கென்னடி. பளீரென்று "இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும். இதுதான் என் இலட்சியம்" என்றான் அந்தச் சிறுவன். விழிகளை உயர்த்தி "குட்" என்று வாழ்த்திவிட்டு கென்னடி நகர்ந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஆவதுதான் இலட்சியம் என்ற அந்தச் சிறுவன் பிற்காலத்தில் அப்படியே ஆனான். அவன் வேறு யாருமல்ல புகழ் பெற்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தான் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பவுலின் 1வது பயணம்

திருத்தூதர்பணி நூலிலே தூய பவுல் 4 திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். நான்காவது பயணமாகிய உரோமைப் பயணமே அவருடைய இறுதிப்பயணமாகும்.

திருத்தூதர்பணி நூலின் முக்கிய நோக்க மான "உலகின் கடை எல்லைவரை நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்பதற்கிணங்க பவுலின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. பவுல் தனது முதலாவது பயணத்தினை பர்னபாவுடன் செல்கிறார். "பர்னபாவையும், சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன்" (தி.ப.13:2) எனும் இறைவார்த்தைக்கமைய செலுக்கியாவுக்குச் சென்று, அங்கிருந்து சைப்பிரசுக்குக் கப்பலேறி னார்கள். அங்கு வந்திறங்கி சாலமி நகரில் யூதர்க ளின் தொழுகைக் கூடங்களில் ஆண்டவரின் வார்த் தையினை அறிவித்தார்கள். அங்கு யோவானைத் தங்கள் உதவியாளராய் ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறு ஆண்டவரின் வார்த்தையினை அறிவித் துக்கொண்டு பார்போவரை சென்றனர். அங்கு "பாரேசு" எனும் போலியான இறைவாக்கினன் ஒருவனைக் கண்டனர். அவன் கடவுளின் வார்த் தையைக் கேட்க விரும்பி பவுலையும், பர்ன பாவையும் அழைத்தான். இதனைத் தடுத்து நிறுத்த 'எலிமா' எனும் மந்திரவாதி முற்படுகையில் பவுல் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அனைத்து வஞ்சகமும் கொண்ட அலகையின் மகனாகிய அவனைச் சபித்துப் பார்வையை இழக்கச் செய்தார். எலிமாவுக்கு நடந்ததைக் கண்ட மக்கள் ஆண்ட வரில் நம்பிக்கை கொண்டனர். பின்பு, பவுலும் அவரோடு இருந்தவர்களும் பார்போவிலிருந்து கப்பலேறிப் பம்பிலியாவிலுள்ள பெர்க்கை நகருக்கு வந்தார்கள். இங்கு யோவான் இவர்களை விட்டு அகன்று ஜெருசலேமுக்குச் சென்றார். பவுலும், பர்ன பாவும் பெர்க்கையை விட்டு பிசிதியாவிலுள்ள அந்தி யோக்கியாவை வந்தடைந்தார்கள். அங்கு ஓய்வு நாளன்று தொழுகைக் கூடத்தில் அமர்ந்திருக் கையில் தொழுகைக்கூடத் தலைவனின் வேண்டு கோளின் பேரில் பவுல் இயேசுவின் மீட்புச் செய்தி பற்றிய நீண்ட உரையினை ஆற்றினார். இங்குதான் முதன் முதலில் சீடர்கள் "அப்போஸ்தலர்கள்" என அழைக்கப்பட்டார்கள்.

இவ்வுரையினைக் கேட்ட அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆண்டவரின் வார்த்தை யைப் போற்றிப் புகழ்ந்தனர். யூதர்களும், யூதத் தைத் தழுவியவர்களும் இயேசுவில் நம்பிக்கை கொண்டனர். ஆண்டவரின் வார்த்தை பல பகுதி களிலும் பரவுவதைச் சகிக்க முடியாத சில யூதர் களும், நகரின் முதன்மைக் குடிமக்களும் தூண்டப் பட்டு பவுலையும், பர்னபாவையும் நகரை விட்டுத் துரத்தி விட்டார்கள். இதனை அறிந்த பவுல் காலிலுள்ள தூசியினை அவர்களுக்கொதிராய்த் தட்டிவிட்டு இக்கோனியா சென்று அங்கு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மகிழ்ச்சியில் இருந் தார்கள். இக்கோணியாவிலும் பல மனமாற்றங்கள் நடந்தன. இருப்பினும், சில நாட்களின் பின் அங்கும் சீடர்களுக்கு எதிர்ப்புகள் தலைதூக்கின. எனவே, லிஸ்திராவுக்கும், தெர்ப்பைக்கும் தப்பிச் சென்றார் கள். அங்கெல்லாம் ஆண்டவரின் நற்செய்தியை அறிவித்தார்கள்.

லிஸ்திராவிலும் சீடர்கள் இயேசுவின் வல்ல மையால் அற்புதங்கள் செய்தனர். பிறவியிலே கால் ஊனமுற்ற ஒருவனைப் பவுல் ஆவியின் வல்ல மையால் "எழுந்து கால் ஊன்றி நில்" என்று கூறிக் குணமாக்கினார். இதனைக் கண்ட கூட்டத்தினர் இவர்களைத் தெய்வமாய் மதித்துப் பலி செலுத்த முற்படுகையில், பவுல் தடுத்து நிறுத்தினார். இங்கும் ஆண்டவரின் வல்ல செயல்களை மக்களுக்குக் கூறினார். இங்கும் யூதர்கள் மக்களைத் தூண்டி விட்டு கல் எறிந்தார்கள். மறுநாள் பவுல் பர்னபாவுடன் தெர்ப்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். பின்பு லிஸ்திரா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோணியா, அந்தியோக்கியா ஆகிய நகர்களுக்குத் திரும்பி வந்தார்கள். அங்கும் சீடர்களின் உள்ளத்தை உறுதிப்படுத்தினார்கள். "வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்படவேண்டும்" என்பதைக்கூறி ஊக்குவித்தார்கள். பின்பு, பிசிதியா வழியாக பம்பிலியா வந்தார்கள். பின்னர், பெர்க்கை வழியாய் பம்பிலியா வந்தார்கள். அங்கும் இறைவார்த்தையை அறிவித்து விட்டு அத்தாலியா வந்தார்கள். பின், அங்கிருந்து கப்பலேறி அந்தியோக்கியா வந்தார்கள். இங்கு தான் அருள் வழங்கும் கடவுளின் பணிக்கென அர்ப்பணிக்கப்பட்டார்கள். கடவுள் தங்களோடு இருந்து செய்த பல வல்ல செயல்களையும் பிற இனத்தவர் நம்பிக்கை கொள்ளும்படி எடுத்துரைத்தனர். இவ்வாறு பவுல் தன் முதல் பயணத்தினை வெற்றிகரமாய் மேற்கொண்டு சென்ற இடமெல்லாம் இயேசுவுக்குச்சாட்சியாய் விளங்கி மக்களை இறைவன் பால் நம்பிக்கை கொள்ளச் செய்தார்.

## போர்க்களத்தில் என் ஜெபம் கேட்டு....

**பல்லவி**

ஆவிக்குள் புதுவாழ்வு தூய ஆவிக்குள் நிலைவாழ்வு
ஆராதனையில் என் மகிழ்வு ஆரவாரத்தில் மிதப்பு
ஆடிப்பாடி ஆர்ப்பரித்து ஆவியிலே நிலைப்பேன் – 2
ஆமேன் என்றுரைத்து அனுதினம் நான் துதிப்பேன் –2

**சரணம் I**

தண்ணீரின் மீது அசைவாடியே
படைப்பின் மீது உயிரூட்டியவர்
முழுமைப்படுத்தலும், அமைதிப்படுத்தலும் – அவர்
புரிந்த அற்புதமே அதிசயமுமாமே...!

ஆவிக்குள்

**சரணம் II**

விரைவாக எம்மில் வாருமையா
நிறைவாழ்வின் ஒளியைத் தாருமையா
உண்மை உணர்ந்திட உணர்வில் நிலைத்திட
உன்னன்பினைத் தாருமையா உலகினைக்
காருமையா


ஆவிக்குள்

**சரணம் III**

அக்கினி மயமாய் உமதாவியை
எம்மீது என்றும் பொழிந்திடுமே
மகிமைப்படுத்தவும் மாட்சி அடையவும்
உன்னன்பிலே நிலைத்திடவும் வல்லமை தாருமையா...!



சாஜஹான்




உலக அளவில் வறுமை நிலையைப் பற்றிய திறனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்று ஐக்கிய நாட்டுக் கட்டமைப்பிடம் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வறுமையை ஒழியுங்கள்

ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டத்தில் வெளிநாட்டு உதவிகள் மட்டும் வறுமையை ஒழிக்க இயலாது. மாறாக தன்னிறைவைப் பெற பாடுபட்டு உழைக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும். என்று பேராயர் ரொம்பசி தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தீய பழக்க வழக்கங்கள் BAD HABITS

**சம்பவம் 1.6 :-**

"இஸ்மாயில்" 17 வயதுடைய பள்ளி மாணவனாவான். கடந்த சில வருடங்களாக அவனில் பல மாற்றங்கள் காணப்பட்டன. தனது அறையில் கூடுதலான நேரத்தை தனிமையில் செலவிடுவான். பெரும்பாலும் அவனது அறை பூட்டியே காணப்படும். திறமைசாலியான இஸ்மாயிலின் பரீட்சை பெறுபேறுகள் அண்மைக் காலமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. தனிமையில் இருந்து கதைப்பது, சிரிப்பது, பாடுவது போன்றனவும் காணப்பட்டன. இந் நடத்தை மாற்றங்களால் இஸ்மாயில் உளநலத்துறை விடுதிக்குக் கொண்டுவரப்பட்டான். ஆரம்பத்தில் ஒருவருடனும் அவன் கதைக்கவில்லை. விடுதியில் அனுமதிக்கப்பட்டபின் உளநல மருத்துவருடன் கதைத்தான். "தனது பெற்றோர் தன்னைக் கொலை செய்யும் திட்டத்துடனேயே கொண்டு வந்துள்ளனர் எனவும், தனது மனதை கடவுள் ஆட்கொண்டுள்ள தாகவும் கூறினான்". தனது அயலவர்கள் எப்போதும் தன்னைப்பற்றி கதைப்பதாகவும், அவர்கள் தனக்கு எதிராகச் செயற்படுவதாகவும் கூறினான். தனக்கு ஒருவித நோயும் இல்லை, அவ்வாறு இருக்க என்னை ஏன் பெற்றோர் இங்கு கொண்டு வந்தார்கள் எனவும் வினவினான்.

### "இஸ்மாயிலின்" பிரச்சனை தான் என்ன?

"இஸ்மாயில்" உளப்பிளவை (Schizophrenia) எனப்படும் பாரிய உளநோயினால் பாதிக்கப்பட்டுள்ளான். இதனால் அவனில் பல்வேறு நடத்தை மாற்றங்களுடன் காதோடு யாரோ கதைப்பது போன்றும், விசித்திரமான விடயங்கள் தொடர்பாகவும் அவனது புலன்கள் வழியாக உணர்கின்றான்.

உளப்பிளவை நோய், ஒரு பாரிய உள நோயாகும். பொதுவாக இந்நோய் 30 வயதிற்கு முன்னர் அதாவது 15 வயதின் பின்னர் பள்ளிப் பராயத்திலேயே ஆரம்பித்துவிடும். இந் நோயினால் பாதிக்கப்பட்டவர் வன்முறை சுபாவமுடையவராகவோ, ஒதுங்கி வாழ்பவராகவோ காணப்படலாம். இங்கு பாதிக்கப்பட்டவரின் எண்ணங்கள், சிந்தனைகள், கற்பனைகள், நடத்தைகள் போன்ற யாவற்றிலும் பாரிய மாற்றங்கள் தென்படும். இவற்றின் வெளிப்பாடாக தனிமையில் இருந்து தனக்குள் கதைப்பது, சிரிப்பது, விசித்திரமான எண்ணங்களைக் கூறுவது போன்றன காணப்படலாம். இந்நோயினால் பாதிக்கப்பட்ட அநேகர் தாம் இவ்வாறான ஒரு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வற்றுக் காணப்படுவர். இதனால் இவர்களை சிகிச்சைக்கு உட்படுத்துவதோ, சிகிச்சையளிப்பதோ முடியாத விடயமாகும். உளப்பிளவை நோய் ஒரு நாட்பட்ட நோயாகும். இந்நோய்க்கு நீண்டகால சிகிச்சையும், போதிய குடும்ப, சமூக ஆதரவும் தேவைப்படும்.

### உளப்பிளவை நோயின் அறிகுறிகள் (Key Features of Schizophrenia)

இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் கீழ்வரும் அறிகுறிகளில் ஒன்றோ பலவோ காணப்படலாம்.

**உடலியல் ரீதியானது ((Physical)**

மாறுபாடான உணர்வுகள். அதாவது தனக்குள் தெய்வங்கள், பேய்கள் அல்லது ஏதாவது ஒன்று இருப்பதான உணர்வு.

**நடத்தை ரீதியானது (Behaving)**

- சாதாரண நடவடிக்கைகள் ஏனையோரிடம் இருந்து விலகி இருத்தல் (Withdrawal)
- அமைதியின்மை (Restlessness)
- வன்முறைக் குணங்கள்
- மாறுபட்ட நடத்தைகள் (Bizarre behaviors)
- தற்சுத்தம், சுகாதாரம் என்பன காணப்படாமை, மிகவும் அழுக்காக இருப்பர்.
- பொருத்தமற்ற கதைகளும், பதில்களும்.

**கற்பனை ரீதியானது (Imaging)**

- பல்வேறுபட்ட ஒலிகளைக் கேட்பதான, தனக்குள் தானே கதைப்பதான உணர்வுகள் (Auditory Hallucinations)
- மற்றவர்களால் பார்க்க முடியாதவற்றை பார்ப்பதான உணர்வுகள். (Visual Hallucinations)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்பவம் 1.7 :-**

பத்மினிக்கு 31 வயது. திருமணமாகியுள்ளாள். கடந்த ஒரு வார காலமாக அவள் பல்வேறு நடத்தை மாற்றங்களைக் காட்டியதால் அவளது கணவர் அவளை உளநல சிகிச்சைக் களத்திற்குக் கொண்டு வந்தார். நித்திரையின்மை, தொடர்ச்சியாக ஓரிடத்தில் இருக்க முடியாமல் நடந்து திரிதல், பிள்ளைகளில் அக்கறையின்மை, முன்னரைவிட இப்போது கதைப்பது அதிகம் அத்துடன் கற்பனை செய்யமுடியாத, நடக்க முடியாத விடயங்கள் பற்றிய தான கதைகள், தன்னால் மற்றவர்களது நோய்களைக் குணமாக்கமுடியும், அவர்களிற்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக்கொடுக்க முடியும், தன்னால் பல காரியங்களைச் செய்ய முடியுமென்ற அதீத நம்பிக்கை, அநாவசியமான செலவீனங்கள் முன்னரை விட தற்போது மிக அதிகம். பத்மினியின் கணவர் தனது மனைவியைக் கொண்டு வருவதற்கு எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து அயலவர்களின் உதவியுடனேயே கொண்டு வந்தார். பத்மினியின் பிரச்சனைதான் என்ன? அவள் "பித்து" (Mania) எனப்படுகின்ற பாரிய உளப்பிளவை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளாள். சாதாரணமாக ஒருவரின் மன நிலையானது எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கம் உள்ளது போல் மனதும் வாழ்க்கையின் இன்ப துன்பங்களிற்கு ஏற்ப மாற்றங்களைக் காண்பிக்கும். அதாவது மகிழ்ச்சியும், கவலையும் ஒருவருடன் இரண்டறக் கலந்தே காணப்படும். அது அவரவர் மனநிலையை, சூழ் நிலையைப் பொறுத்து வேறுபடலாம். இவ்வாறான மனநிலையில் பாரிய ஏற்ற இறக்கம் காணப்படும்போது அது பாரிய உளநோயாக உருவெடுக்கின்றது. இதனை இருமுனைவு அல்லது மனோபாவக் கோளாறு (Bipolar Disorder) என அழைக்கலாம். இதில் எழுச்சி கொண்ட மனநிலையை "பித்து" எனவும் (Mania) தாழ்ந்த / சோர்ந்த மன நிலையை (Depression) எனவும் அழைக்கலாம். இந்நோயானது பொதுவாக வாலிபப் பருவத்தில் ஆரம்பிக்கும் மனோபாவக் கோளாறு. நோயால் பாதிக்கப்பட்டவர் ஒரு நேரத்தில் பித்து நிலைக்குரிய அல்லது மனச்சோர்வு நிலைக்குரிய அறிகுறிகளைக் கொண்டிருக்கலாம். இந்நிலை ஒருவருக்கு மாறி மாறி ஏற்படலாம்.

**சம்பவம் 1.8 :-**

அன்ரனி 34 வயதுடையவர். திடீரென அவரது நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் கடந்த 3 தினங்களிற்கு முன்னர் ஏற்பட்டது. அன்ரனி ஓய்வற்றவராகவும், குழப்பமான கதைகளுடனும், சுயநினைவற்றவராகவும், சுயமரியாதை அற்றவராகவும் குறிப்பாக பொதுமக்கள் மத்தியில் தனது உடைகளைக் களைவது போன்ற அசாதாரண நடத்தைகள் காணப்பட்டன. அவர் முன்னர் ஒரு மன நோயாளி அல்லர். கடந்த சில தினங்களிற்கு முன்னர் அன்ரனி காய்ச்சல், தலையிடி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பின்னரே அவரின் நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அன்ரனி வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டபோது மாறாட்ட நிலையுடனும், சுயசிந்தனை அற்றவராகவும், நாள், நேரம், சம்பவங்கள் பற்றிக் கூற முடியாதவராகவும் காணப்பட்டார். மற்றவர்கள் பார்க்க முடியாதவை பற்றிக் கூட அன்ரனி கதைத்தார். அத்துடன் அவரது உடல் வெப்பநிலை மிக அதிகமாகக் காணப்பட்டதுடன், கழுத்தும் அசைக்க முடியாமல் அவதிப்பட்டார்.

**அன்ரனியின் பிரச்சினை என்ன?**

அன்ரனி Delirium / (உளமாய நோய்) எனப்படுகின்ற மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதற்கு அவரிற்கு ஏற்பட்ட மூளைமலேரியா காரணமாக அமையலாம்.

சடுதியாக ஏற்படுகின்ற உளமாய நோய்களும் பாரிய உளப்பிளவை நோய் போன்ற தோற்றப்பாடுகளை வெளிக்காட்டலாம். ஆனால் இவை உடனடியாக நோய் அறிகுறிகளை வெளிக்காட்டும். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் ஒரு சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ சாதாரண நிலைக்கு திரும்பி விடுவார்கள். இவர்களிற்கு நாட்பட்ட சிகிச்சை தேவைப்படுவதில்லை. சடுதியான உளமாய நோய்கள் (Brief Psychosis) திடீரென ஏற்படுகின்ற பாரிய நெருக்கீடான சம்பவங்கள் தொடர்ந்து ஏற்படலாம். உதாரணமாக நெருங்கிய உறவு ஒருவரின் இழப்பிற்குப் பின்னர் சிலவேளைகளில் பாரிய உடல்நோய்கள் அல்லது மூளை தொடர்பான சுகயீனங்கள் கூட ஒருவரில் உளமாய நோய்களை ஏற்படுத்தலாம். இவ்வாறு ஏற்படும்போது இதனை "டிலீரியம்" (Delirium) எனலாம். இதற்கு உடனடி அவசர சிகிச்சை தேவைப்படும்.

**சடுதியான உளமாய நோய்களின் அறிகுறிகள் :-**
**(The Key Features of acute or Brief Psychosis)**

இங்கு அறிகுறிகள் உளப்பிளவை அல்லது பித்து நிலைக்குரியதாகக் காணப்படலாம். அறிகுறிகள் உடனடியாக ஆரம்பித்து ஏறத்தாள ஒருமாதமளவிற்குக் காணப்படலாம். - பாரிய நடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் அதாவது அமைதியின்மை, வன்முறைக் குணம்.

- செவிவழியாக வித்தியாசமான ஒலிகளைக் கேட்டல் (மாயப்புலனுணர்வு)
- பார்வை வழியான மாயப்புலனுணர்வுகள்.
- கற்பனைக்கடங்கா (Bizarre) எண்ணங்கள்
- அநாவசியமான கதைகள்
- பயந்த சுபாவம் அல்லது சடுதியாக மாறும் உணர்ச்சிகள் (அழுதல், சிரித்தல்)

**மூளைவிருத்தி குறைந்த நிலை (Mental Retardation)**

பொதுவாக மூளைவிருத்தி குறைந்த நிலை என்பதை மற்றவர்கள் மாறுபாடான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பது வழக்கம். அதாவது மூளை விருத்திக் குறைவை தெய்வ நிந்தையென்றும் ஊழ் வினைப்பயன் என்றும் கூட வியாக்கியானம் கொடுக்கலாம். மூளைவிருத்தி குறைவிற்கு "மந்த கற்றல் செயற்பாடு" (Learning disability) என அழைக்கலாம். இங்கு பாதிக்கப்பட்ட நபர் தனது வாழ்க்கைச் செயற்பாடுகளை கற்றுக் கொள்வதற்குச் சாதாரண மானவர்களை விட அதிககாலம் எடுத்துக் கொள்ளலாம்.

மூளை விருத்திக் குறைவு ஒருபோதும் மனநோய்க் கோளாறு போன்ற தோற்றமுடையது அல்ல. அது நோயாக இருந்தால் சிகிச்சையால் கட்டுப்படுத்தவோ, குறைப்படுத்தவோ முடியும். மூளைவிருத்திக் குறைவு என்பது குழந்தைப் பருவத் திலேயே ஆரம்பிக்கின்ற ஒன்றாகும். இவ்வாறாக இது குறித்த நபரின் ஆயுள்வரை காணப்படலாம். இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மூளை விருத்தியும் செயற்பாடும் அந்த வயது ஒத்தவர்களை விட மந்தமாகவே காணப்படும். இவ்வாறான பிள்ளைகளின் பெற்றோர் அல்லது உறவுக்காரர் குறித்த பிள்ளையை சிகிச்சைக் களம்களிற்குக் கொண்டு வருவது குழந்தையின் தற்சுத்தம், பாடசாலை செல்வதில் உள்ள கடினம், நடத்தைக் குளறுபடிகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக அமையும்.

**சம்பவம் 1.9 :-**

ரூபி மிகக் கடினமான பிள்ளைப் பேற்றை தொடர்ந்து உலகிற்கு வெளிப்பட்டாள். அவளது தாய் இரண்டு நாட்களாக பிரசவ வேதனையால் கஷ்டப்பட்டதோடு பிள்ளைப்பேற்றின் போது குழந்தை பிரசவ பாதையில் அகப்பட்டுக் கொண்டது. இதன் பின்னர் குடும்ப சுகாதார மாது பல கஷ்டங்களிற்கு மத்தியில் பொது மருத்துவமனையில் அனுமதிப்பதற்குள் மூன்று மணிநேர கால தாமதம் ஏற்பட்டது. வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சையின் பின்னர் குழந்தை வெளியேற்றப்பட்டது. குழந்தை உடனடியாகச் சுவாசிப்பதற்கு பல மணிநேர தாமதம் ஏற்பட்டது. வைத்தியர்களின் கடின முயற்சியால் குழந்தையின் உயிர் காப்பாற்றப்பட்டது. ரூபியின் பெற்றோர் குழந்தையை மிக அவதானமாகப் பராமரித்து வளர்த்தார்கள். குழந்தையும் ஆரம்பத்தில் நன்றாகக் காணப்பட்டது. பின்பு ரூபியின் வளர்ச்சிப் பாதையில் பல பின்னடைவுகள் தென்பட்டன. மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிடும்போது ரூபியின் விருத்திப் பருவங்களில் பின்னடைவுகள் பாரியளவில் தென்பட்டன. இரண்டு வயதாகியும் நடக்கவோ, அம்மா, அப்பா என்று சொல்லவோ முடியவில்லை. அதன்பின்னர் அவர்கள் ரூபியை குழந்தை வைத்திய நிபுணரிடம் கொண்டு சென்றார்கள்.

**ரூபியின் பிரச்சனை தான் என்ன?**

ரூபி மூளைவிருத்திக் குறைவால் (Mental Retardation) பாதிக்கப்பட்டுள்ளாள். பிள்ளைப் பேற்றின் போது பிரசவத்தில் ஏற்பட்ட நீண்ட தாமதிப்பு அதற்குக் காரணமாக அமையலாம்.

மூளை விருத்திக் குறைவை பல்வேறு படிநிலைகளிற்கூடாக அவதானிக்கலாம்.

1) **சாதாரண மூளை விருத்திக் குறைவு:-** பாதிக்கப்பட்ட பிள்ளையின் கற்றல் செயற்பாடுகளை மட்டும் பாதிக்கும். ஏனையவை பாதிக்கப்படமாட்டாது.

2) **இடைநிலை மூளைவிருத்திக் குறைவு:-** பாதிக்கப்பட்ட பிள்ளை பாடசாலை செல்வது, தற் சுத்தம் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும்.

3) **தீவிர மூளைவிருத்திக் குறைவு:-** பாதிக்கப்பட்ட பிள்ளை சகல தேவைகளிற்கும் ஏனையோரில் தங்கி வாழும். சாதாரண மூளை விருத்திக் குறைவால் பாதிக்கப்பட்டவர்களால் தனித்து வாழ முடியும். அவர்கள் ஏனையோருக்குப் பாரமாகவோ, சுமையாகவோ இருக்கப் போவதில்லை.

இவ்வாறான பிள்ளைகள் வைத்திய உதவிக்கோ ஏனைய உதவிகளிற்கோ செல்வதில்லை.

– தொடரும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

தற்கால உலகம் மிகவும் விரைவானதாகக் காணப்படுகின்றது. இவ்விரைவு இலக்கியத்தையும் விட்டு வைக்கவில்லை. முன்னைய காலங்களில் நாளிதழ்கள், வாரஇதழ்கள், சஞ்சிகைகள் என்பன வற்றில் சிறுகதைகள் பல பக்கங்கள் கொண்டதாக வெளியிடப்பட்டன. வாசகர்கள் ஆறுதலாக இரசித்து அவற்றை வாசித்தனர்.

ஆனால் தற்போது, இயந்திரமயமான உலகத்தில் வாசிப்பதற்கு மக்களுக்கு நேரமில்லை. ஏன் சிலவேளைகளில் உணவருந்தக்கூட நேரம் இருப்பதில்லை. ஒற்றைக்கையால் உணவைச் சாப்பிடும் விரைவு மக்களை நாம் காண்கின்றோம். இவ்வகையில் இவற்றுக்கீடு கட்டும் வகையில் அமைக்கப்பட்டுக் காணப்படும் விரைவு உணவ கங்கள் (Fast food) போன்று இலக்கியங்களும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டுள்ளன.

சஞ்சிகையை எடுத்துக் கொண்டால் தற்போதைய கால மாறுதல்களின் வெளிப்பாடாக குட்டிக் கதைகள், நிமிடக்கதைகள் என்ற பெயர்களில் சின்னஞ்சிறிய கதைகள் சுமார் 20 வரிகளுக்குள் பெட்டி அடைப்புக்குள் வெளிவருக்கின்றன. நமது அரசியல்வாதிகள் அடிக்கடி சொல்வது போல் ‘இது காலத்தின் கட்டாயம்’ உலக மயமாக்கலின் பாதிப்பும் இதில் அடங்குகின்றன.

கடுகு சிறிது ஆனால் காரம் பெரிது என்பது போல் அவை குட்டிக் குட்டிக் கதைகளாக இருப்பினும் சொல்லும் செய்திகளில் கருப்பொருளில் வீரம் மிக்கவை.

இவ்விடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். ‘நர்மதா’ வெளியீட்டில் பிரவசமாகியுள்ள ‘சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு’ என்னும் நூலொன்று அண்மையில் பார்வைக்கு கிடைத்தது. இதனை கலாநிதி வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். இப்புத்தகத்தின் முன் அட்டையின் அடியில் இவ்வாறு ஒரு வரி காணப்படுகின்றது.

‘FAST LEARNING SERIES’

பார்த்தீர்களா இங்கும் உலகின் விரைவு பாதித்துள்ளது. மிகவும் அழகாக சுருக்கமாக ஆனால் தெளிவாக பத்துப்பாட்டுக்களைப்பற்றி இப்புத்தகம் குறிப்பிடுகின்றது; பரீட்சைக்கு தயாராக எடுத்த சுருக்கக் குறிப்புகள் போன்று.

திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்துப்பாட்டுகள் பற்றி இப்புத்தகம் கதைக்கின்றது; வெகு சுருக்கமாக.

இதனைத் தவிர உள்ளட்டையில் இன்னொரு விடயத்தையும் அச்சிட்டுள்ளார்கள். இதுவும் நம்மைக் கவர்கின்றது. அதை அப்படியே தருகின்றோம்.

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க,

- ✧ நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- ✧ அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டிருப்பதனை விடுங்கள் (Loose Talk)
- ✧ எந்த விஷயத்தையும், பிரச்சினையும் நாசுக்காக கையாளுங்கள் (Diplomacy ) விட்டுக்கொடுங்கள் (Compromise)
- ✧ சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத் தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance)
- ✧ எல்லோரிடமும் எல்லா விசயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- ✧ உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இராமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)
- ✧ மற்றவர்கட்கு மரியாதை காட்டவும், இனிய இயமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்( Courtesy)
- ✧ புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- ✧ பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சை துவங்க முன்வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ் மேரி அவர்களின் பொன் விழாவும் என் நினைவலைகளும்



~ பிறிஜ்ஜட் மரிம்பிள்ளை ~

ஆடித்திங்கள் பதிநான்காம் நாள் அருட்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ் மேரி அவர்களின் துறவற வாழ்வின் ஐம்பது ஆண்டு நினைவையொட்டிய பொன்விழாவிற்காக திருமலை புனித சூசையப்பர் மடத்துச் சிற்றாலயம் பலவர்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. உறவினர்கள், நண்பர்களென பலராலும் ஆலயம் நிறைந்திருந்தது. பொன்விழா நாயகி, அருட்சகோதரிகள் புடைசூழ ஆலயத்துள் அழைத்து வரப்பட்டதும் காலை 10.30 மணியளவில் ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை அவர்களினால் திருப்பலி ஆரம்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கென வருகை தந்திருந்த அருட்தந்தையர்களுடன் திருமலை புனித மரியாள் ஆலயப் பங்குத்தந்தையர்களும் திருப்பலியில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

திருப்பலிவேளையில் ஆயர் அவர்கள் தமது உரையில் துறவற வாழ்வில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து, அந்தப் பொன் விழாவைக் காண்பது என்பது எல்லோருக்கும் கிடைக்காத ஒன்று என்பதை எடுத்துக் கூறியதுடன் அவரின் வரலாறு, சாதனைகள் என்பவற்றையும் சுருக்கமாகவும், அழகாகவும் கூறினார். திருப்பலி முடிவுற்றதும் அன்பாக அழைத்து வரப்பட்டு அழகுற அலங்காரம் செய்யப்பட்ட ஆசனத்தில் அமர்த்தப்பட்டார். மாணவிகள் இன்னிசைபாடி வாழ்த்தொலி கூறினர். பொன்னாடை போர்த்தி, மலர்மாலை சூட்டி பலர் தம் அன்பையும் மகிழ்வினையும் வெளிக்காட்டிக்கொண்டனர். விசேட அன்புக்குரியவரான செல்வி. வினோபியா மலர்மாலை சூட்டி, கவிதையால் வாழ்த்துரைத்தார். மதியபோசன விருந்தானது அவரது விருந்தோம்பலின் எண்ணப்பாடாக விளங்கியமை கண்கூடு. விழாவை மிகத்திறம்பட நடாத்தி, அருட்சகோதரியை மகிமைப்படுத்திய பெருமை மடத்துத் தலைவி அருட்சகோதரி சர்மிளாவிற்கும் உதவி புரிந்த மற்றய அருட்சகோதரிகளுக்குமே உரித்தாகும்.

சின்ன ரோம் என சிறப்புப்பெயர் கொண்ட சில்லாலைப்பதியைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவர் அருட்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ்மேரி. புகழ்கொண்ட வைத்தியரான பிரகாசிப்பிள்ளை தம்பதியினரின் ஒன்பது பிள்ளைகளில் கடைசிப் புத்திரியாவார். இவர் தனது ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்ட பின் பயிற்றப்பட்ட ஆசிரியராக திரேசா பிரகாசிப்பிள்ளையென்னும் தன் சொந்தப் பெயருடன் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரிக்குப் பணியாற்ற வந்திருந்தார். அவ்வேளையில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் இவருக்கு ஏற்பட்ட ஈடுபாட்டால் 1954ம் ஆண்டு இந்தியாவிற்குச்சென்று 1957ல் கார்மேல் சபைத் துறவியாக தன்னை அர்ப்பணம் செய்து கொண்டார்.

இறைபக்தி கொண்ட இவரது சூழல் காரணிகளும் இவர் துறவியாவதற்கு ஒரு தூண்டுகோலாய் இருந்ததென்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. யோசேப்வாஸ் அடிகளாரின் காலடிபட்ட மண் என்பதால்தான் சில்லாலைக்குச் சின்ன ரோம் எனக் காரணப் பெயர் வந்ததென்பர். கதிரைமாதா ஆலயம் என அழைக்கப்படும் அந்தச் சில்லாலைக் கோவிலின் உள்ளே மாதா கதிரை மீது அமர்ந்திருப்பது ஒரு கண்கவர் காட்சி. சில நூற்றாண்டுகளைக் கடந்த மிகப் பழமை வாய்ந்தது இந்த மாதா சொரூபம் என்பதனைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். முக்கனிகளின் பிறப்பிடம் யாழ்பூமி என்பதற்கு சான்று பகர்வது போன்று கோவிலைச் சுற்றி கோவில் வளாகம் பலாமரச் சோலையாய்க் காட்சி அளிக்கின்றது.

அவர்களது இல்லமும் கூட ஓர் ஆலயம் போன்றது தான். தெய்வீக மணம் கமழும் வாயில் புறத்தோற்றமும் இறைபக்தியின் வெளிப்பாடான அந்த வீட்டின் கட்டமைப்புகளும், காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் ஆழ்ந்த இறைபக்தி கொண்ட குடும்பத் தின் சின்னங்களாகத் தோற்றம் காட்டின. தந்தை வழி வந்த வைத்தியத்தில் கைதேர்ந்த வராய் அதனைக் கடைப்பிடித்து ஒரு துறவி போலவே வாழ்ந்தவர் இவருடைய சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது. ஏன் இந்த அருட் சகோதரியும் கூட பலருக்கு வைத்தியம் செய்துள் ளார் என்பதை யாவரும் அறிவர். இவர் தனது ஆசிரியப் பணியில் கூடுதலான காலத்தை அதிபர் பதவியிலேயே கழித்துள்ளார். யாழ்/ புனித டொன்பொஸ்கோவில் மட்டும் மூன்று முறை அதிபராக இருந்த பெருமை இவருக்குண்டு.

அதன்பின் 1972ம் ஆண்டு அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரிக்கு அதிபர் பொறுப்பேற்று மாற்றலாகி வந்தபொழுது தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் அவருடன் பணியாற்றிய அனுபவம் எனக்குள்ளது. அந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் அவர் ஆற்றிய பணிகள் சொல்லி முடிக்க முடியாத அளவிற்கு அளப்பரியன. இது ஓர் எடுத்துக்காட்டல் மட்டுந் தான். சுற்றுலாப் பயணங்களில் இந்தியாவரை சென்று வந்ததும் இவரது காலத்தில்தான். உடற்கல்விப் போட்டிகளில் முதன்மை பெற்ற பொற்காலம் அது. யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற உடற்கல்விப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நகர முன்ன ணிப் பாடசாலைகளுடன் சரிநிகராகப் பங்கு பற்றும் சந்தர்ப்பம் எமது பாடசாலைக்கு மட்டுமே அப்பொழுது கிட்டியது.

ஆளுமையின் எடுத்துக்காட்டாய், கடமை கண்ணியத்தின் இலக்கணமாய் தன்னைக் காட்டிக் கொண்டதுடன் ஆன்மீகத் துறைக் காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும் செய்த சேவைகள் சொல்லும் தரமன்று. கலை நிகழ்ச்சி கள், விருந்தோம்பல்கள் எல்லாம் பாராட்டுப் பெற்ற காலங்கள் அவை. இன்றும் அறிந்திருந்த அந்தத் தாராள விருந்தோம்பல் பண்பாடு அவரைவிட்டு விலகவே இல்லை. பாடசாலை நேரத்தில் அவரிடம் எவராலும் நெருங்க முடி யாது. ஆனால் அந்த நேர எல்லை தாண்டி விட்டால் அவரோர் இனிய தோழியாக உருமாறி விடுவார். இதை அவரும் சொல்லிக் கொள்ளு வார். ஒருவருக்குள் இருவர் என்ற சொல்லின் இலக்கணம் இவர்தானோ என்று எண்ணத் தோன்றும். நேரம் என்றால் அது ஒரு நேரம் தான், அதற்கு முன், பின் எதுவுமில்லை என்ற அவரது கோட்பாட்டின் படி இம்மியும் பிசகாது. நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டியதில் இவர் ஆயிரத்தில் ஒருவர் என்பது ஆணித்தரமான உண்மையாகும். சேவைக்கு ஒரு சகோதரியாய், வாழும் காலத்திலேயே நீண்ட அவரது அரும் பணி பாராட்டப்படல் வேண்டும். தங்கத்துடன் வைரமும் கண்டு நீண்டாயுளுடன் நீழ்நிலத்தில் வாழ்ந்திட நிமலனை வேண்டி நிற்கின்றோம்.

பொன்விளையும் அச்சூநகர், துறவிகளின் விளை நிலமாகி கார்மேல் சபைக்கு அருட் சகோதரிகள் அனேகரைத் தந்துள்ள வரலாற்று உண்மை யாவருக்கும் தெரிந்த ஒன்று. இதில் முக்கிய பங்குள்ளவரும் பாராட்டுக்குரியவரும் அருட்சகோதரி எவறெல்டா அவர்களே. இவற் றுக்கெல்லாம் அடித்தளமிட்டவர் மறைந்தும் மறையாது இன்றும் பெயர் சொல்லி நிற்கும் அச்சூநகரில் பிறந்த மண்ணின் மைந்தனாகிய செவாலியர் சேர்.சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் அவர்களே. யாழ்ப்பாணத்தில் 1948ம் ஆண்டு அச்சுவேலியில் தான் கார்மேல் சபையார் முதன் முதலில் கால் பதித்தனர் என்பதையும் பெருமை யுடன் இங்கு குறிப்பிடல் வேண்டும்.

## கடல் பயணத்தின் போது....



கடலில் அதிக பயணம் செய்து புதிய நிலப் பகுதிகளைக் கண்டு பிடித்தவர்களுள் ஒருவர் கேப்படன் ஜேம்ஸ் குக். இவர் நீண்ட தூரம் பயணம் போகும்போதெல்லாம் பெரிய ஜாடிகளில் கரட், கோவா இரண் டையும் பதப்படுத்தி எடுத்துச் செல்வாராம். தன் குழுவினருக்கு ஊட்டச்சத்து 'சி' பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதற்கா கவே இந்த ஏற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பல்கலைக்கழக வரலாறு (சுருக்கம்)



இலங்கை 1948ல் சுதந்திரம் அடைந்த வேளையில்,

இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரியும், இலங்கை மருத்துவக்கல்லூரியும் ஒன்றிணைக்கப்பட்டு 1942ஆம் ஆண்டு 20ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட "இலங்கைப் பல்கலைக்கழகம்" அப்போதிருந்த ஒரேயொரு பல்கலைக் கழகமாகும். கற்பித்தல்மொழி ஆங்கிலமாகவே காணப்பட்டது. இது பேராதனையில் நிறுவப்பட்டிருந்தது.

பிக்குகள் பயிலும் பிரபல நிலையங்களான, வித்தியோதய, வித்தியலங்கார பிரிவேனாக்கள் 1959ல் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டன. 1960ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள, தமிழ் மொழிமூலம் கல்வி வழங்கப்பட்டது.

**இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்கள்:-**

01. பேராதனை பல்கலைக் கழகம் - 1942
02. சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (வித்தியோதயா) - 1959
03. களனி பல்கலைக்கழகம் (வித்தியலங்கார) - 1959
04. கொழும்பு பல்கலைக்கழகம் - 1967
05. கட்டுப்பெத்தை பல்கலைக் கழகம் - 1972
06. யாழ்ப்பாண பல்கலைக் கழகம் - 1974
07. திறந்த பல்கலைக் கழகம் நுகேகொட - 1980
08. ருகுணு பல்கலைக் கழகம் மாத்தறை - 1980
09. கிழக்கு பல்கலைக் கழகம் மட்டக்களப்பு - 1986
10. சப்பிரகமுவா பல்கலைக் கழகம் பெலிகுல் ஓயா - 1995
11. இராசரட்டை பல்கலைக் கழகம் அநுராதபுரம் - 1995
12. தென் கிழக்கு பல்கலைக்கழகம் ஒலுவில் - 1996
13. குளியபிட்டிய பல்கலைக்கழகம் குருணாகல் - 2002
14. இலங்கை பௌத்த பாளி பல்கலைக் கழகம் 1982

1979ல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது.
1978ல் உயர்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது.
1991ல் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவப்பட்டன.
1981ல் முதற் தடவையாக மாணவர்களுக்கு மகாபொல உதவித்தொகை வழங்கப்பட்டது.

**- வயலற் சந்திரசேகரம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப் புத்தகம்



கடவுள் எமது ஆன்மாவுக்கு ஞானப் பலனாக ஞான உணவைக் கட்டளை இட்டார். ஞானப்புத்தகங்களின் வசனங்களைக் கொண்டு ஆன்மாவுக்கு நல்ல நினைவு, நல்ல சிந்தனை என்பன வருவதால் அத்தகைய ஞானவசனம் ஞான உணவென்று சொல்லப்படுகிறது. புனித டொமினிக் ஞானப் புத்தகங்களை எடுத்து நெஞ்சின் மீது வைத்து "இவை எனக்கு ஞானப்பால் கொடுக்கிறது. இவை வழியாக என் ஆன்மாவுக்கு ஞானத்திடன் வருகிறது" என்று சொல்வார். ஆகவே நாமும் எமது ஆன்மா நன்மையில் திடமாய் இருக்க ஏதேனும் ஞானப் புத்தகத்தை வாசிக்க வேண்டும். இவற்றை வாசிப்பதன் மூலம் எமது ஆன்மாவுக்கு மிகுந்த ஞானப்பலன் உண்டாகும்.

புனித பெரிய அந்தோனியார் சரித்திரத்தை வாசித்த ரோமாபுரி இராயன், அரண்மனையில் பணி புரிந்த துரை மகனான போஞ்சியானு என்கிறவனும், அவனுடைய பிள்ளைகளும், மூன்று பிரபுக்களும் உலக இன்பத்தை வெறுத்து தவம் செய்யப் போனார்கள். அதேபோன்று கொலும்பீனு அருளப்பன் என்கிறவன் தன் மனைவி சமையல் சீக்கிரம் முடிக்கவில்லை என்று கோபமான போது மனைவி கூறினாள், "சமையல் ஆகுமட்டும் ஏதாவது புத்தகத்தை வாசியுங்கள்" அவன் அதிக கோபத்துடன் இருந்தாலும் ஒரு ஞானப்புத்தகத்தை எடுத்து வாசித்தான். அவர் பிற்காலத்திலே செய்த புண்ணியத்தால் முக்திப்பேறு பெற்ற பட்டமும் அடைந்தார்.

இயேசு சபையை நிறுவின புனித இஞ்ஞாசியார் புனிதர்களின் சரித்திரங்களை வாசித்ததால்தான் உலகத்தையே வெறுத்தார். ஆகையால் ஞானப் புத்தகத்தை கொண்டு நாமும் அநேக ஞான நன்மைகளை அடையலாம். நான் பாவி, புனிதர்களைப் போன்று நாமும் நடக்க முடியுமா என்று ஐயப்படக் கூடாது. ஏனெனில் புனிதர்களும் நம்மைப் போல் மனிதர்கள் தான். நமக்குக் கோபம், பல ஆசாபாசங்கள் வருவது போல் அவர்களுக்கும் வந்தது. ஆனால் அவர்கள் கடவுளின் உதவியால் எல்லாவற்றையும் வென்று நல்ல எண்ணங்களுக்கு இடங்கொடுத்து நன்மை செய்து வந்தார்கள்.

அவர்களுக்குள்ளே சில பேர் நம்மை விட அதிக பாவிகளாயிருந்தவர்கள். அவர்கள் கடவுளின் உதவியினால் மனந் திரும்பினார்கள். நாமும் சோதனைக்கு இடங் கொடாமல் நல்ல எண்ணங்களுக்கு இடங் கொடுத்து பாவத்தை விட்டு மனந்திரும்பினால் நாமும் அவர்களைப் போல் புனிதர் ஆகலாம். சோதனையில் நாம் அகப்படாதவாறு நல்ல எண்ணங்களுக்கு இடங் கொடுக்கவும் பாவத்தை விட்டுத் திரும்பவும் கடவுள் எல்லா மனிதருக்கும் உதவி செய்வார்.

ஆகவே, நாம் ஞானப் புத்தகத்தை வாசித்தால் மட்டும் போதாது, அதன் வழி சென்று நல்ல எண்ணங்களுக்கு இடங் கொடுத்து, பாவத்தைக் கடவுளின் உதவி கொண்டு விரட்டுவோம்.

P. பிறேம்றோஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- மெற்றில்டா இராஜேந்திரம் -

## சமூக ஒருமைப்பாடு

ஆதிமுதல் மனிதன் ஒன்றிணைந்து வாழவும், செயற்படவும் வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொண்டான். பொதுமுன்னேற்றத்தை உருவாக்கவும், பொதுப்பிரச்சினைகட்கு முகம் கொடுக்கவும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற பல சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் துணையமைப்புகள் வழியாக மனிதனின் உடல் நலன், ஆன்மீக கலாசார விருத்தி போன்றவை சம்பந்தமாக விசேட கவனத்தைச் செலுத்தவும் நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் ஐ.நா.சபை முன்வருகிறது.

ஒன்றிணைந்து சமூகமாக வாழ்வது மனிதத் தேவையாகும். அது இறைசித்தம் எனவும் நாமறிவோம். ஆதாம், ஏவாள் ஆதிப் பெற்றோராகக் கருதப்படுகையில், அவர்களால் உருவான மனித குலத்தில் அனைவரும் அனைவருக்கும் உறவுதான். மனிதனுக்கு உயிரைக் கொடுத்தவர் இறைவன். "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். (தொடக்கநூல் 1:27) எனவே, மனிதரிடையே பிளவுகள் தோன்றுவது நல்லதல்ல. ஒன்றித்து வாழ்கையில் கிறிஸ்து எம்மில் வாழ்வதையறிவோம்.

**இடையூறுகள்:**

ஒன்றிணைந்த வாழ்வுக்கு ஊறு விளைவிப்பவை.

1. சாதிவேற்றுமை
2. கட்சிப்பாகுபாடு
3. மதவேற்றுமை
4. சமுதாய வேறுபாடுகள்
5. நிறவேறுபாடுகள்.

ஒரு நாடு இன்னுமொரு நாட்டையடக்கியாளப் பொருளாதாரம், போர் ஆகியவற்றின் மூலம் எத்தனிக்கிறது. மொழி, மதம், இனம் போன்றவற்றை முன் வைத்து மனிதன் சகோதரரை ஒதுக்குகிறான். அனைத்து இயற்கை வளங்களும் முழு மனித இனத்துக்கும் பொதுவானதென்ற பொதுக்கொள்கை இருப்பினும், வளப்பகிர்வு ஒரு சில நாடுகளில் இடம்பெறுவதில்லை. மனிதன் வேறுபடுவது இறைசித்தம் அல்ல. இதனால் ஏற்படுவது அழிவுதான். "தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும். அவ்வாறே தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த நகரமும் வீடும் நிலைத்து நிற்காது" என்று கிறிஸ்து கூறுகிறார். (மத்தேயு: 12-25)

**ஏனைய மதங்களும் நாமும்:**

மதச் சுதந்திரமென்பது மனித உரிமையாகும். எமது தாய்த்திருச்சபை இதனை மதித்துப் பாதுகாக்க முயற்சிக்கிறது. இதனால் ஒருங்கிணைந்த சகவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும். எமது இலங்கைத் திருநாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம் என்ற ஏனைய சமயங்களைப் பற்றியும் நாம் பூரணமாக அறிந்திருத்தல் வேண்டும். வேறுபாடுகளுக்கு மத்தியில் நாம் ஒற்றுமையை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

**பௌத்த சமயம்:**

இந்தியாவின் கோசலநாட்டிலே ஐக்கிய குடியேற்ற வம்சத்திலே கபிலவஸ்து நகரில் புத்தர் பெருமான் பிறந்தார். கிறிஸ்துவுக்கு முன் வேது நூற்றாண்டில் தோன்றியவர். அக்காலச் சமூகத்தின் துர்ப்பாக்கிய நிலையை மாற்ற அரும்பாடுபட்டார். குலவாதம் மிகவும் பிழையானதென்பதையெடுத்துக் காட்டினார். ஒருவன் உயர்வதும், தாழ்வதும் பிறப்பு, பரம்பரை ஆகியவற்றாலல்ல, அவனது சிந்தனை, செயல் ஆகியவற்றாலேயே. நல்ல எண்ணம், நல்ல பேச்சு, நல்ல செயல்கள் ஆகியவை மூலமாகவே உயர்வடைகிறான். பௌத்த சமயம் ஒரு தத்துவமாகும். இதிலிருந்து மனிதனது அன்றாட வாழ்வை மேம்படுத்தமுடியும். இச்சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் வருமாறு...

1. காரணங்களின் பலாபலன்கள்.
2. துன்பங்களையகற்றும் நால்வகைச் சத்தியங்கள்.
3. நோக்குடன் செய்யும் செயல்கள்.
4. மறுபிறப்பு.
5. நிர்வாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்துசமயம்:**


உலகின் பழைமை மிக்க ஒரு சமயமாகும். மிகப்பழைய காலத்தில் பார்சியர் இந்து நதிப்பள்ளத் தாக்கில் வசித்த மக்களை இந்துக்கள் என அழைத்தனர். இந்துக்கள் ஒரே இறைவன் இருப்ப தாகவும், இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்ற நான்கு நூல்களின் உண்மைகளையும் பெற்றுக் கொள்வர். தமிழ் இந்துக்களிடையே சைவம், வைஷ்ணவம் என 2 பிரிவுகளுண்டு. சைவமக்கள் சிவபெருமானை முழுமுதல் தெய்வமாகக் கொள்வர். இவர்களைத் தவிர வைஷ்ணவர் விஷ்ணுவைத் தெய்வமாகக் கொள்கின்றனர். வேறுவேறான கிரிகை கள், சடங்குகள் நடைபெறுகின்றன. விழாக்களும் அவ்வாறே. ஆதியிலிருந்தே இலங்கை யில் சைவ சமயம் இருந்தது என்பதை வரலாறு அத்தாட்சிப் படுத்துகிறது. சைவக் கோயில்களில் தினமும் 6 வேளைகளில் பூசை நடைபெறும். தியானம், நோன்பு ஆகியவற்றின் மூலம் இறைவனைக் காண முயல்வர்.

**இஸ்லாம் சமயம்**

கிறிஸ்து வருடம் 6ம் நூற்றாண்டில் முகமது நபி அவர்கள் இஸ்லாம் சமயத்தை எடுத்துரைத் தார்கள். இந்தச் சமயத்தின் அடிப்படைக் கொள்கை "அல்லாஹ்" எனும் ஒரே இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதே. இச்சமயத்தின் முக்கிய குறிக்கோள்கள் பரிசுத்த "அல் குர் ஆன்" எனும் நூலில் அடங்கியுள் ளது. மரணத்தின் பின் சுவர்க்கத்தை எதிர் பார்க்கும் இவர்கள், அந்நோக்குடன் நோன்பிருத்தல், ஓதுதல் போன்றவற்றை மிகவும் அவதானத்துடன் பின்பற்றுவர். வழிபாடு மட்டுமல்ல நல்ல கிரிகைகளும் ஒரு மனிதனுக்குத் தேவையென்பதை இஸ்லாம் பக்தர்கள் ஏற்கின்றனர். ஒழுக்கம், இறை வணக்கம், சமுதாய ஒருமைப்பாடு போன்றவற்றிலுள்ள சடங்கு களைச் சரியான முறையில் கடைப்பிடிப்பர்.


கிறிஸ்தவர்களாகிய நாம் இறைசித்தப்படி வாழவேண்டியவர்கள். எனவே ஏனைய சமயத்தைச் சார்ந்தவர்களையும் மதித்து ஒருமைப்பாட்டுடன் வாழ முன்வருவோம்.

## அடேயப்பா!!



சூரியனின் வெப்பக் கதிர்கள் 930 இலட்சம் மைல்கள் பணித்து பூமிக்கு வர சுமார் எட்டு நிமிடங்கள் ஆகின்றன. மிக வேகமான ஒரு ஜெற் விமானம் அந்தத் தூரத்தைக் கடக்க 18 வருடங்கள் ஆகும்.

பிரித்தானியாவின் அரசி எலிசபெத் வாழும் அரண்மனையின் பெயர் பக்கிங்ஹாம் என்பது பலருக்கும் தெரிந்ததுதான். பழமையும் பெருமை யும் பெற்ற இந்த அரண்மனை பிரித் தானிய சாம்ராஜியத்தின் அடையாள மாகத் திகழ்கிறது. இந்த அரண்மனை யில் உள்ள அறைகளின் எண்ணிக்கை 302.



## புகழ்பெற்ற அரண்மனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மையான நட்பு

நட்பு என்று சொல்லப்படுவது பாசத்தினால் ஏற்படுகின்ற ஒன்றாகவும், கருத்தியலுடன் ஏற்படு கின்ற ஒற்றுமையினாலும் உண்டாவது ஆகும். இத்தகைய வரையறை நட்புக்கு இருந்தாலும், உள்ளத்தில் நஞ்சு கொண்டு வாழ்வியலை அழிக்கும் போலி நட்புகளும் இருக்கத்தான் செய்கின்றன.

ஒருவரின் வாழ்க்கைத் தரம் என்று சொல லப்படுவது, அவர் கொள்ளும் நட்பினைப் பொறுத்தே காணப்படுகின்றது. சிலர் மற்றவர்களுடன் நட்புக் கொள்ளாது தனிமையில் வாழும் போக்கும் இருக்கி றது. இத்தகைய தன்மை கொண்டவர்கள் தமது சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளவும், பொருட் களைப் பகிர்ந்து கொள்ளவும் ஆட்கள் இல்லாது இருப்பார்கள். இவர்கள்தான் மன அழுத்தம் நிறைந் தவர்களாகக் காணப்படுவர்.

நண்பர்கள் இல்லாதவர்களுக்கு மனநிலை யும் உடல்நிலையும் அதிகமாக பாதிப்படைகின்றது. இவர்கள் சுயநலம் கொண்டவர்களாக இருப்பார்கள். பொதுச் சேவையில் ஈடுபடமாட்டார்கள். மாறாக நல்ல நல்ல நண்பர்களை உடைமையாக கொண்டவர் களின் வாழ்வு செழிக்கும். ஏனெனில் அவர்களுடைய மகிழ்ச்சியில் நண்பர்கள் பங்கெடுக்க இருப்பதினால் ஆகும். இதை விவிலியத்தில் "நண்பன் எப்போதும் அன்பு காட்டுவான். இடுக்கணில் உதவுவதற்கே உடன் பிறந்தவன் இருக்கின்றான்". (நீதி 17:17) என்று கூறப்பட்டுள்ளது.

செய்கின்ற குற்றங்களை மன்னித்து ஏற்றுக் கொளுகின்றவனாக உண்மையான நண்பன் இருக்கின்றான். "குற்றத்தை மன்னிப்பவர், நட்பை நாடுகிறவர்" (நீதி 17:09) என்று நீதிமொழிகள் மீள்வலியுறுத்துகின்றது.

ஒருவர் குற்றம் இழைத்தால் மற்றவர்கள் பொருட்படுத்தாமல் முகத்தாட்சணியம் கூறி வாழ்த்தும் தன்மை பொதுவாக இருக்கின்றது. உண்மையான விமர்சனம் கூறும் பாங்கு இன்று இல்லாமலே போய்விட்டது. ஆனால், உண்மையான நண்பன் தன் நண்பன் குற்றம் இழைக்கும் பட்சத் தில், அவன் திருந்த நல்ல ஆலோசனை கூறுகின்ற வனாக இருக்கின்றான். அவன் ஒருபோதும் தன் நண்பனுக்குத் தீமை நினைக்க மாட்டான்.

நாம் பலருடன் நட்புக் கொண்டாலும், ஒரு சிலர்தான் துன்பத்திலும், மகிழ்விலும் பங்கு கொள்ளுகின்றார்கள். அவர்களை இனம் காண வேண்டும். நல்ல நட்புகள் வாழ்வை செழிப்பாக்கும்; ஆன்மீக வாழ்வின் முன்மாதிரிக்கு இறைமகன் இயேசுவை நண்பனாக்குவோம்.

– யாழ் ராதவல்லி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




R. ஸ்ரான்லி பிரபாகரன்

## வருவதுரைக்கும் கனவு (Predictive Dreams)

வருவதுரைக்கும் கனவுகள் எதிர்காலத்தில் நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளைச் சுட்டுகின்றன. அல்லது அவை நிகழ்வதற்குப் பெரிதும் உதவுகின்றன. நான் உறவு சம்பந்தமான கனவுகள் கண்டுள்ளேன். பல நாள் கனவு கண்டது போல வாழ்வில் நிகழ்ந்துள்ளன.

ஆபிரகாம் லிங்கன் கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன் அவர் கண்ட கனவை இங்கு விவரிப்பது மிகப் பொருத்தமானதாகும்.

"என்னைச் சுற்றி ஒரே மயான அமைதி; அதைத் தொடர்ந்து பலர் அழுவதைக் கேட்டேன்; என்னுடைய படுக்கையை விட்டு எழும்பி நான் கீழ் மாடி வழியாக அலைந்து திரிந்தேன்; அங்கும் அமைதியைக் குலைக்கும் வண்ணம் அழுகை ஒலி கேட்டது; ஆனால் அழுபவர்களைக் காணவில்லை. அந்த அழுகை ஒலி மட்டும் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தது. எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அறையில் இருந்த எல்லாப் பொருட்களும் எனக்கு நன்றாகத் தெரிந்தவை. ஆனால் துயரத்தோடு அழுது கொண்டிருக்கின்ற மக்கள் எங்கே?" அதை நினைத்ததும் அதிர்ச்சிக்குள்ளானேன். இவற்றின் அர்த்தம் என்ன? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் கண்ட காட்சியின் அர்த்தம் என்ன என்று சிந்தித்துக் கொண்டே ஓர் அறைக்குள்ளே நுழைந்தேன். அங்கே மனதை வருத்தும் ஒரு சோகமான காட்சியைக் கண்டு அதிர்வுற்றேன். என் முன்னால் பிணங் கொண்டு செல்வதற்குரிய ஓர் ஊர்தியில் ஒரு பிணம் இறுதிச் சடங்குக்குப் பயன்படுத்தப்படும் துணிகளால் போர்த்தப்பட்டிருப்பதைக் கண்டேன். அதைச் சுற்றிப் படைவீரர்கள் காவல் காத்துக் கொண்டிருப்பதையும் பார்த்தேன். ஆனால் மக்கள் கும்பல் துயருற்று அழுது கொண்டிருப்பதையும் சோகமாக அந்தப் பிணத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதையும் கவனித்தேன். வெள்ளை மாளிகையில் (White House) இறந்தது யார்? என்று ஒரு படைவீரனிடம் கேட்டேன். ஜனாதிபதி என அவன் பதில் கூறினான். அவரை ஒரு கொலை பாதகன் சுட்டுக் கொன்று விட்டான் என்றும் கூறினான். அப்போது அந்த கும்பலில் இருந்து மிகுந்த சத்தத்துடன் அழுகை ஒலி எழுந்தது. அந்தச் சத்தத்தில் என் கனவு கலைந்து விட்டது"

ஆபிராகம் லிங்கன் கண்ட இந்தக் கனவு அவரது இறப்பைச் சுட்டிக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. அவர் இறந்த செய்தியையோ அல்லது இறந்த காட்சியையோ மட்டும் தெளிவற்ற நிலையில் உணர்த்தாமல் கொலையுண்டு இறந்தார் என்ற செய்தியை மிகத் தெளிவாக உணர்த்துகின்ற விதமானது நம்மை வியக்கச் செய்கின்றது. கனவில் அவர் கேட்ட செய்தி போல் அவர் நிஜமாகக் கொலை செய்யப்பட்டார். இதன் வழியாக வருவதுரைக்கும் கனவுகள் எதிர்காலத்தில் வருவதைத் துல்லியமாக எடுத்துக்காட்டும் தன்மையுடையன என்பதை நாம் அறிந்து கொள்கின்றோம். எல்லாக் கனவுகளையும் இதே விதத்தில் பார்ப்பது பாதிப்புக்குரிய செயலாகும்.

## எதிர்கால வாழ்வினை எதிர் நோக்கிய கனவு (Prospective dreams)

எதிர்காலத்தை மையமாகக் கொண்ட கனவுகள் இவை. இவை ஒருவருடைய உள்ளார்ந்த ஆற்றல்களையும் பிரச்சனைக்கான மாற்று வழிகளையும் தெளிவாக எடுத்துக்கூறும் தன்மை வாய்ந்தவை. பணியாளர் வல்தாரிஸ், 'கனவு கூறும் கருத்து' என்னும் புத்தகத்தில் அவரிடம் உளநல உதவி பெற வந்தவர் ஒருவரின் கனவை எழுதியுள்ளார். அவருடைய கனவு பின்வருமாறு.

"நான் ஓர் ஈரமான தரையிலிருந்து சேற்றைப் பிசைந்து கொண்டிருந்தேன். திடீரென நான் சகதிக்குள் மூழ்குவதை உணர்ந்தேன். என்னுடைய கால்களில் பாதி அளவு சகதிக்குள் மூழ்கும் வரை நான் சகதிக்குள் சென்று கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தேன். நான் வெளியே வரக் கடுமையாக முயற்சித்தேன். அவ்வேளை நான் என்னுள் ஒரு புதிய சக்தி வெளிப்படுவதை உணர்ந்தேன். பேராற்றலோடு என்னுடைய சக்தியை ஒன்று திரட்டிக் கால்களை வெளியே எடுக்க முயற்சித்தேன். முயற்சியில் வெற்றி கண்டேன்."

அவள் கால் மூட்டில் புற்று நோய்க்காக சிகிச்சை மேற்கொண்டிருந்தாள். மருத்துவர்கள் அவள் காலை அகற்றிவிட வேண்டும் எனக் கூறியிருந்தனர். காலை துண்டித்து விட வேண்டியது தானோ என்ற கவலையும் பயமும் அவளுக்குள் இருந்தன. இக்கனவை ஆற்றுப்படுத்தினரிடம் பகிர்ந்து விளக்கம் காண முயற்சிக்கும் போது அவளுடைய கால் அகற்றப்படாமலேயே புற்று நோய் குணமாக முடியும் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொண்டனர். உண்மையிலேயே அப்பெண் அற்புதமாகக் குணம் பெற்றாள். இன்றும் பூரண சுகத்தோடு வாழ்கிறாள் என்று பணியாளர் வல்தாரிசு கூறுகிறார். அவர் தற்பொழுது புற்றுநோய்க்கான சிகிச்சை முறை குறித்து ஆய்வும் மேற்கொண்டுள்ளார்.

மனிதனின் உள்ளுணர்வு பேராற்றல் வாய்ந்தது. உள்ளுணர்வாற்றல் நமக்கு எச்சரிக்கும் தன்மை உடையதாக விளங்குகின்றது. நாம் செய்ய வேண்டிய செயல்களைக் கவனத்தோடு செயல்பட உதவுகின்றது என்பதை இக்கனவு சுட்டிக் காட்டுகின்றது.

எதிர்கால வாழ்வினை எதிர்நோக்கிய அவளுக்கு இது பேருதவி. மனச் சஞ்சலத்தோடு வேதனையோடு குழம்பிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணுக்கு இக்கனவு ஒரு விடி வெள்ளியாகக் காட்சியளிக்கின்றது. மருத்துவரே காலை அகற்றிவிட வேண்டும் என ஒரு முடிவுக்கு வந்த பின் அகற்றாமலேயே குணம் பெற முடியும் என ஒரு மாற்று வழியையும் அப்பெண்ணின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் இக்கனவு தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. எனவே இக்கனவுகள் மனிதனுக்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

### உளஞ்சார்ந்த கனவு (Psychic dreams)

இவ்வகைக் கனவுகள் புலனுணர்வு சார்ந்தவை. இவை காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்டவை. நம்முடையப் புற அறிவைச் சார்ந்தவை அல்ல. நெருங்கிய உறவுடையவர்கள் தாங்கள் விரும்பியவர்களைப் பற்றி கனவு காணலாம். நான் பணி வாழ்வுக்குப் பயிற்சி பெறுகின்றபோது நெருங்கிய நண்பர்களைக் கொண்ட குழு ஒன்று எனக்கு இருந்தது. அடிக்கடி ஏதாவது பிரச்சனைகளுக்கு உள்ளாவோம். மடத் தலைவர்கள் அடிக்கடி எங்களைத் தவறாகப் புரிந்து கொள்வதுண்டு. என்னையே அந்தக் குழுவுக்குத் தலைவனாக அவர்கள் எண்ணினர். அதனால் என்னைக் கழற்றி விட வேண்டுமென மிகவும் முயற்சி செய்த ஆன்மீக வாதிகளின் செயல்பாடுகள் என்னையும் எங்கள் குழுவையும் மிகவும் பாதித்தது.

ஒருநாள் என் நெருங்கிய நண்பர் அதி காலையில் என்னுடைய அறைக்கு வந்து தான் ஒரு கனவு கண்டதாகக் கூறினார். அக்கனவில் எனக்கு பணியாளனாகும் தகுதி இல்லை என்று என்னைப் பணிப்பயிற்சி இல்லத்தை விட்டு (Seminary) வெளியே போகச் சொல்லியிருக்கின்றனர். நான் போய் விட்டேன் எனக் கனவுகண்டு பயந்து அதனைச் சோதிப்பதற்காக வந்தார். இது என்னுடைய நண்பனின் உள்ளுணர்வு சார்ந்த அனுபவம். அவருக்கு என்மேலிருந்த பாசத்தின் வெளிப்பாடும் கூட. அவருடைய உள்ளுணர்வாற்றலை வளம் பெறச் செய்வதன் வழியாக மற்றவர்களுக்குப் பெரிதும் இவர் உதவும் படியாகக் கற்றுக் கொள்ளலாம். நடைபெற்ற சம்பவங்களால் என்னை வெளியேற்றி விடுவார்களோ என்ற அச்சம் அவர் மனதில் இருந்ததும் என்மேல் அவர் கொண்டிருந்த அன்புமே அவரது ஆளுமையில் பதிந்திருந்தது. அது கனவாக வந்தது. கனவு பற்றி நான் ஓரளவு அறிந்திருந்ததால் அவரது ஆழமான உள்ளுணர்வோடு கூடிய அன்பை சுவைக்க முடிந்தது.

### தெளிவான துலக்கமுள்ள கனவு (Lucid Dreams)

கனவுக்குள்ளேயே இன்னொரு கனவு காண்பது போன்று கனவு காண்பவர் உணர்கின்றார். என்னுடைய கனவு ஒன்றில் நான் உண்மையாக என் அப்பாவிடம் பேசிக் கொண்டிருந்ததுபோல் ஒரு நிகழ்ச்சி. ஆனால் அப்பா இறந்து பதினைந்து வருடங்கள் ஆனது திடீரென ஞாபகம் வந்தது. விழித்துக்கொண்டேன். அப்பாவைக் காண வேண்டுமென்ற ஆசையும் இக்கனவுக்கொரு காரணமாக இருக்கலாம்.

### சாதாரண கனவு (Ordinary dreams)

சாதாரண கனவுகள், கனவு காண்போரின் அக வாழ்வையும் புற வாழ்வையும் நகைச்சுவைப் பொருந்திய வண்ணம் பிரதிபலிக்கின்றன. கனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்போரின் விருப்பங்களைத் தெளிவாக வெளியிடுகின்றன. எனக்குத் தெரிந்த ஒருவரின் மகன் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தான். அவன் கிறிஸ்தவன். அவன் மதத்தையும் மதக் குருக்களையும் வெறுத்தான். எந்தக் குருவையும் அவன் பார்க்க விரும்புவதில்லை. அவனுடைய இச்செயல் பெற்றோர்களுக்குப் பெரும் மனவேதனை அளித்தது. இவனது அப்பா என்னிடம் தான் கண்ட ஒரு கனவைப் பகிர்ந்து கொண்டார். அதாவது தன்னு டைய மகன் ஒரு குருவை அழைத்து வரச் சொல்லி அவரிடம் மனம் விட்டுப்பேசி ஒப்புரவு அருட்சாதனம் பெற்று ஆசிபெற்றதாக இக்கனவு அவருடைய விருப்பத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. தன் மகன் சாகும் தறுவாயிலாவது கடவுளோடு ஒப்புரவாக வேண்டுமென்ற விருப்பம் தான் இவ்வாறு கனவாக வந்தது. கனவுகளில் உறுதியூட்டும் கனவுகள், தண்டனைக் கனவுகள், விழிப்புணர்வூட்டும் கனவுகள், மனித ஆளுமையில் புதைந்து கிடக்கும் பகுதிகளை வெளிப்படுத்தும் கனவுகள் என இன்னும் சில வகை இருக்கின்றன. அவற்றைப் பற்றிய விவரங்களை 'சிக்மண்ட் ஃபிராய்டு' என்ற அதிகாரத்தில் பார்ப்போம்.

**கனவுகளின் பணிகள் (Functions of dreams)**

கனவு சுயத்தின் (self) விளைபலன். அது தனிப்பட்ட மற்றும் கூட்டுத்தன்மை வாய்ந்தது (individual and collective). சுயம் உலகத்திலுள்ள அனைத்தையும் உள்ளடக்கும் திறமை வாய்ந்தது. சுயம் ஒரு சிறிய உலகம். அண்டமும், பிண்டமும் ஒன்றே என்ற தத்துவார்த்தக் கூற்று மிகப் பொருத்தமானதாக இந்நிலையில் அமையும்.

கனவுகள் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் உள்ளடக்கியவை. உள்ளார்ந்த மற்றும் வெளியில் உள்ள ஆற்றல்களை சுயம் அறியும். கனவு காண்பவர் அர்த்தம் தரும் ஆற்றல்களைத் தேர்ந்து கொள்ள சுயம் விரும்புகின்றது.

கனவுகள் இழப்பீட்டுப் பணிபுரிகின்றன என கார்ல் யூங் கூறுகின்றார். உணர்வு நிலை மனிதனின் ஒரு பக்கத்தை மட்டும் பிரதிபலிக்கின்றது என்பது இவர் கருத்து. நமது கண்ணோட்டம் ஒரு சார்புடையதாக இருக்கின்றது. சுயம் எதையுமே முழுமையாகப் பார்க்கும் தன்மையுடையது. எனவே உணர்வு நிலையால் செய்ய முடியாததைச் சுயம் (self) கனவில் செய்வதன் வழியாக இழப்பீட்டுப் பணி செய்கின்றது என்பது உறுதி. நான் என்னுடைய நிறைகள் நிறைந்த உருவத்தை மட்டும் வெளிப்படுத்தினால் சுயம் என்னுடைய குறைகளையும் கனவு வழியாக வெளிப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக நான் என்னைக் கனிவானவனாகவும் இரக்கமுள்ளவனாகவும் உலகிற்கு வெளிப்படுத்தினால் சுயம் என்னைக் கொடியவனாகவும் பேராசையுள்ளவனாகவும் கனவு வழியாக எனக்கு வெளிப்படுத்துகின்றது. நான் குறையுள்ளவனாக இருந்தால் நிறைகளை ஏற்றுக் கொள்ளும் வழியைக் காட்டுகின்றது.

கனவுகள் நன்கு புலப்படுத்தும் பணி செய்கின்றன. கனவுகள் ஒருவனுடைய நிஜத்தை நிஜமாகப் பிரதிபலிக்கின்றன. நம்மைப் பற்றிய நிஜத்தை நாம் தெரிந்து கொள்வதற்குக் கனவுகளை அலசிப் பார்ப்பது அவசியம்.

கனவுகள் ஆளுமையைத் துலங்க வைக்கின்றன. கனவுகள் நம்மை நாமாக ஏற்றுக்கொள்ள உதவுகின்றன. கார்ல் யூங், ஈரா புரோகாப் என்பவர்கள் கனவுகள் எதிர்காலத்தைச் சுட்டும் தன்மை வாய்ந்தவை எனக் கூறியுள்ளார்கள். இக்கனவுகள் வழியாக எதிர்காலத்தை வளம் பெறச் செய்யும் வழிகளை நாம் தேர்ந்து கொள்ளலாம்.

கனவே இல்லாத ஒரு வாழ்வைப்பற்றி டிமெண்ட (Dement) என்பவர் ஆய்வு நடத்தினார். கனவு இல்லாமல் இருக்கும் நிலையில் பதட்டம் எரிச்சல், கவனக்குறைவு, மனதை ஒருமுகப்படுத்த முடியாமை போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆனால் கனவு காணும் நிலையில் இந்தக் குறைபாடுகள் எதுவும் இருப்பதில்லை.

கனவுகள் நமது ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. நம்முடைய ஆளுமையை வளப்படுத்தக் கனவைப் பற்றிய தெளிவான அறிவு இன்றியமையாதது.

நன்றி:- டாக்டர் அ. அல்போன்ஸ்
"கனவுகள், கற்பனைகள், காவியங்கள்"
(Dream Analysis)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15 - 10 - 2007




# விவிலியம் கற்போம் - 60

**(விடுதலைப் பயணம் 40:1-38)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் பின்வருமாறு கூறினார். "முதல் மாதத்தில், முதல் நாள், சந்திப்புக் கூடாரத்தின் திரு உறைவிடத்தை எழுப்புவாய், அங்கே உடன்படிக்கைப் பேழையை வைத்து அதனை ................................ திரையால் மறைத்துவிடு. பின்னர் மேசையைக் கொண்டு வந்து உரியவாறு ஒழுங்குபடுத்து, மேலும் விளக்குத்தண்டினைக் கொண்டுவந்து அதன் அகல்களை ஏற்று, உடன்படிக்கைப் பேழைக்கு முன் பக்கம் பொன் தூப பீடத்தை வை. திரு உறைவிட நுழைவாயிலில் திரையைத் தொங்கவிடு ................................ திரு உறைவிட நுழைவாயிலுக்கு முன்புறம் எரிபலி பீடத்தை வை. எரிபலி பீடத்திற்கும் அதன் அனைத்துத் துணைக்கலன்களுக்கும் திருப்பொழிவு செய்து, அப்பீடத்தை அர்ப்பணிப்பாய். சந்திப்புக்கூடார நுழைவாயிலின் அருகில் ஆரோனையும் அவன் .......................... வரச்செய்து தண்ணீரால் கழுவு. ஆரோன் குருத்துவப் பணியாற்றும்படி அவனுக்குத் திருவுடைகள் அணிவித்து அவனுக்கு அருள் பொழிவு செய்து அவனைத் திருநிலைப்படுத்து. அவன் புதல்வரையும் அருகில் வரச் செய்து அவ்வாறே செய். அவர்களின் அருள் பொழிவு தலைமுறைதோறும் நிலைநிற்கும் ................................ விளங்கும்" மோசே அவ்வாறே செய்தார். இரண்டாம் ஆண்டில், முதல்மாதம், முதல் தேதியன்று திரு உறைவிடம் எழுப்பப்பட்டது. உடன்படிக்கைப் பலகையை எடுத்து அதைப் பேழையில் வைத்தார். தண்டுகளைப் பேழையில் செருகினார். இரக்கத்தின் இருக்கையைப் பேழையின் மேல் வைத்தார். திரு உறைவிடத்தினுள் ................................ எடுத்துச் செல்லப்பட்டது. திருத் தூயகத்திரை தொங்கவிடப்பட்டு உடன்படிக்கைப் பேழை மறைக்கப்பட்டது. சந்திப்புக்கூடாரத்தில் திரு உறைவிடத்தின் வடபுறம், திருத்தூயகத் திரைக்கு வெளியே அவர் மேசையை வைத்தார். அதன்மேல் ஆண்டவர்முன் திருமுன்னிலை ................................ முறைப்படி வைத்தார். மேசைக்கு எதிரே, விளக்குத் தண்டை நிறுத்தினார். அகல்களை ஏற்றினார். சந்திப்புக் கூடாரத்தில் திருத் தூயகத் திரைக்கும் முன்னே பொன்பீடத்தை வைத்தார். திரு உறைவிடத்தின் நுழைவாயிலில் திரை தொங்கவிடப்பட்டது. நுழைவாயிலின் முன் ................................ வைத்தார். அதன்மேல் எரிபலியும் உணவும் படையலும் செலுத்தினார். திரு உறைவிடம், பலிபீடம் இவற்றைச் சுற்றி எங்கும் முற்றம் அமைத்தார். முற்றத்தின் நுழைவாயிலில் திரையைத் தொங்கவிட்டார். பின்பு ................................ சந்திப்புக் கூடாரத்தை மூடிற்று; ஆண்டவரின் மாட்சி திரு உறைவிடத்தை நிரப்பிற்று. மோசே உள்ளே நுழைய முடியாமற் போயிற்று. இஸ்ரயேல் மக்கள் தங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மேகம் ................................ விட்டு எழும்பும்போது புறப்பட்டுச் செல்வார்கள். மேகம் எழும்பாதிருக்கும் போதோ, அது எழும்பும் நாள் வரை, அவர்கள் புறப்படமாட்டார்கள். பகலில் ஆண்டவரின் மேகம் இருப்பதையும் இரவிலோ அதில் ................................ இருப்பதையும் இஸ்ரயேல் வீட்டார் காண்பார்கள்.

விடைகள்:- **மேகம், திருஉறைவிடத்தினுள், நெருப்பு, எரிபலிபீடத்தை, திருத்தூயக, திரு உறைவிடத்தை, சந்திப்புக் கூடாரத்தின், அப்பத்தை, குருத்துவமாக, பேழை.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 60

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக் கோடிடுக)

01) காற்றின் வேகத்தை அளக்கும் கருவி
(தேமாமீற்றர், அனிமாமீற்றர், குளுக்கோமீற்றர்)

02) வத்திக்கான் நாடு தோன்றிய ஆண்டு
(1920, 1929, 1915)

03) பணப்பயிர் என்று அழைக்கப்படுவது
(தேயிலை, சணல், நெல்)

04) இசைக் கருவிகளின் ராணி என்று போற்றப்படுவது
(வயலின், பியானோ, நாதஸ்வரம்)

05) முதல் சோதனைக் குழாய்க் குழந்தை உருவான ஆண்டு
(1970, 1978, 1975)

06) 'கார்குழல்' என்பது
(உவமைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................


அனுப்பவேண்டிய முகவரி:

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 60**
**தொண்டன்**
**அ.பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக அமர்ந்து என்ன செய்தார்?

விடை: ........................................................................................................

2. எத்தனை காசு அந்த ஏழைப் பெண்ணால் போடப்பட்டது?

விடை: ........................................................................................................

3. கடவுளுடைய பார்வையில் அந்த ஏழை கொடுத்த கொடையா, அல்லது பணக்காரர் கொடுத்ததா ஏற்றுக் கொள்ளப்பட்டது?


விடை: ........................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை

(மாற்கு: 12:41-44)

இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக அமர்ந்து கொண்டு மக்கள் அதில் செப்புக்காசு போடுவதை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். செல்வர் பலர் அதில் மிகுதியாகப் போட்டனர். அங்கு வந்த ஓர் ஏழைக் கைம் பெண் ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு காசுகளைப் போட்டார். அப்பொழுது, அவர் தம் சீடரை வரவழைத்து "இந்த ஏழைக் கைம்பெண், காணிக்கைப் பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரையும் விட மிகுதியாகப் போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டு விட்டார்" என்று அவர்களிடம் கூறினார்.



அனுப்புதல்:-

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

..........................................................

..........................................................

சேரல்:- *வர்ணம் தீட்டும் போட்டி* - இல 12

தொண்டன்

அ.பெ. எண் - 44

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 58 விடைகள்

மூன்று முழம், சட்டிகள், வெண்கல, வலைப்பின்னலின், ஆதாரத்தையும், பாதப்பொருத்துகளும், இருபது, தொங்குதிரைகள், ஆராத்தி, 20825 கிலோ கிராம் ஆகும்.

## அறிவை வளர்ப்போம் - 58 விடைகள்

1. இதயம்
2. 1929
3. இளங்கோஅடிகள்
4. 103
5. சீனா
6. வெறக்

**போட்டியின் இருபிரிவுகளுக்கும் சரியானவிடை எழுதி 150/= பரிசு பெறுவோர்**

- V. இம்மானுவல்
  57 நீதி மன்ற வீதி
  திருகோணமலை
- S. ஸ்டெனிரொனேஷ்
  7ம் பிரிவு
  ஸ்பிரிங்வெளி (பதுளை)

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- செல்வி. அ. சிரோமி லக்ஷாந்தி
  "இனிக்கோ" புதுமுகத்துவாரம்
  கல்லடி, மட்டக்களப்பு
- G, உஷாந்தினி
  95, அம்மன் கோவில் வீதி
  கல்முனை - 01

**பாராட்டுப் பெறுவோர்**

- தா. மாதவி
  கார்மேல் அருணோதயம்
  அம்பாறை வீதி, அக்கரைப்பற்று
- மியுளின் பேடினன்ஸ்
  165/B பிரதான வீதி
  கல்முனை

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 10 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  அற்புதராஜ் அஜித்
  இல 23, குமரத்தன்
  கோயில் வீதி
  ஜெயந்திபுரம், மட்டக்களப்பு
- **இரண்டாம் பரிசு** - 200/=
  J. நிஷாந்தினி
  இல 58/1 C.E.B வீதி
  நற்பிட்டிமுனை 06
  கல்முனை
- **3ம் பரிசு** - 100/=
  வினோபியா அன்ரன்
  57, நீதிமன்ற வீதி
  திருகோணமலை

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
14
06
1952

இறப்பு
22
09
2007

இறப்பினும் வாழும் எங்கள்

மட்/புனித மிக்கேல் கல்லூரி அதிபர்

அருட்சகோதரர் A. **ஜேம்ஸ் பீரிஸ்** F.C அவர்கள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

நித்திய வாழ்வில் நீங்கள் இளைப்பாற

நிமலன் திருவருள் இறைஞ்சுகின்றோம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

'தொண்டனின்' குடும்பத்தினர்.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org